
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)

JAFFNA HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION (UK)

ESTD 1987



பெருமையுடன் வழங்கும்

# கலையரசி

# Kalaiyarasi

- 2014 -

# CASUARINA tree

Restaurant & Bar

Sri Lankan & Indo Chinese Cuisine

**Bed and Breakfast**

**Function Room**

**Beer Garden**

**Shisha Bar**

**Amble Car Park**






**020 8648 4868**

www.casuarinatree.com

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ.இ)

# JAFFNA HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION (UK)

ESTD 1987



பெருமையுடன் வழங்கும்

# கலையரசி

Kalaiyarasi

- 2014 -

**Saturday 5th April 2014**

**Fairfield Hall, East Croydon. CR9 1DG.**

**Chief Guest : A. Nallanathan**

Professor of Wireless Communications, King's College London

Main Sponsors : RiverSure Insurance · CASUARINA tree Restaurant & Bar

# கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக் கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே

எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன தருள்கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவையியல் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரின கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப்பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில வாழிய நீடு.



# Message from Secretary

Selvadurai Thevarajah

**Dear Guests,**

It is an honour and a great pleasure for me to welcome you all to our annual cultural and fundraising event, "Kalaiyarasi 2014". Thanks to your continuous and cordial support, Kalaiyarasi has become a key event in Tamil's calendar in the UK.

In our 27 year history, it is the first time Kalaiyarasi has come to South London and we are proud to host her at the grand Fairfield Hall in Croydon. I appreciate the Kalaiyarasi committee's commitment and hard work in this regard.

Over the course of last twelve months we have been very busy organising further events which I describe as follows;

1. Battle of Blues – The cricket encounter between Hartley College Old Boys and JHC Old boys. For the first time last year Junior teams were participated.

2. Jolly Stars 20/20 – Last year's tournament was held at Winchmore Hill cricket ground on 23rd June 2013. Again, for the first time we introduced the junior cricket to encourage our next generation.

3. Kalaiyarasi 2013 – Our annual cultural event "Kalaiyarasi 2013" on Saturday, 07th September at the Walthamstow Assemble Hall.

4. Jolly Vibe - We celebrated the dawn of the New Year 2014 with Jolly vibe, our annual Dinner Dance, on Saturday, 4th January 2014, at the Holiday Inn – Newbury Park, London.

In line with our OBA objectives, we helped our beloved school with building a new toilet facility. Also we supported our student with cost of air fare to attend Olympiad competition held in Philippines.

Let me take this opportunity to acknowledge the individuals and organisations behind Kalaiyarasi 2014's mega success.

First, I would like to thank our main sponsors Riversure and Casuarina Tree for their continued support. Also I thank our co-sponsors of the event especially, Accident Courtesy, Mylocum, Mr Uthayaraj and V&E.

I thank Professor A Nallanathan and his wife for accepting our invitation and being present here today as Chief guest.

I also would like to thank Tempo music and all the artists for providing a lively show this evening. Special thanks go to dance teacher Mrs Menaka Raviraj and her young talents for an awesome performance.

Kenton Sound complemented the show with high quality sound management. Staff and management at Fairfield Hall helped us to co-ordinate the event efficiently. Casuarina Tree restaurant provided a mouth-watering dinner. I thank Mr Sritharan of Home Video for capturing the event for future memories and Mr Jeyaraj for producing colourful visual aids and the souvenir.

By far the most importantly, I thank you all, your friends and families for being present here today and making the event a magnificent success. It is a pleasure to have our old boys who came from around the world to garnish the evening.

As the current secretary, I really enjoy working with the committee and fellow members who have tirelessly supported me to carry out my functions. Personally, I extend my heart felt gratitude to you all.

Thank you.
**Selvadurai Thevarajah**
Secretary



## கல்லூரி அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து அன்னை தமிழர் தம் தலைநிமிர் கழகமாக அறிவியற் கோயிலாக 125வது வருடங்கள் காலூன்றி வேரூன்றி கிளைபரப்பி தேசமெங்கும் தளைத்தோங்கி நிற்கின்றாள். எமது கல்லூரின் மைந்தர்களும் தங்களை இதயத்தால் அரவணைத்து அறிவூட்டியஅ ன்னையின் மீது நீடித்த நீங்காப் பற்றும் நெஞ்சம் நிறைந்த அன்புப்பிணைப்பும் கொண்டு கற்ற தாய்க்கு நன்றிப் பெருக்குடன் ஆற்றிவரும் அரும்பணிகளின் வரலாற்றுப் பதிவுச் சான்றாக கலையரசி என்ற சஞ்சிகை வெளிவருவது கண்டு அளக்கலாக மகிழ்வு கொள்கிறேன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரித்தானியாக்கிளையினர் தொடருறு வருடங்களாக கலையரசியை வெளியிட்டு உலகமெங்கும் புகழ் பரப்பி புதுமை செய்து வருகிறார்கள் இம்மலருக்கு அதிபர் என்ற வகையில் ஒன்பதாவது வாழ்த்துச் செய்தியை அனுப்புவதற்கு கிடைத்த வாய்ப்பும் வரலாற்றுப் பதிவும் கிடைத்ததெண்ணிப் பெருமிதம் கொள்கிறேன். உள்ளத்தில் உவகை பொங்க பூரிப்புடன் வாழ்த்துகின்றேன்.

நான் பிரித்தானியாவுக்கு வருகை தந்த காலத்தில் யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ரு.மு) என்றும் யாழ் இந்துக் கல்லூரி ஒன்றியம் (ரு.மு) என்றும் இரண்டாக பிரித்தானியாவில் இயங்கிக்கொண்டிருந்த சூழ்நிலையில் சான்றோரின் முயற்சியாலும் கல்விமான்களின் அறிவூட்டல்களாலும் பழைய மாணவ உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து வெளியிடும் சஞ்சிகை என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கிறேன்.

சர்வதேசம் எங்கும் இயங்கும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்ககிளைகளின் முன்னோடியாவும் வினைத்திறனுடனும் அரும்பணிகள் பல ஆற்றி வருகின்றனர். கல்லூரியின் பௌதிக வளங்களுக்கும், கவின்தோற்றப்பாட்டிற்கும், கல்வியின் நேர்முக மறை முக அபிவிருத்திகளுக்கும் கலைகலாசார மறுமலர்ச்சிக்கும், விளையாட்டுத் துறையில் வெற்றியீட்டும் சாதனைகளுக்கும் அடித்தளமமைத்து ஆற்றிவரும் உதவிகளைப் பற்றி விபரித்துக் கூறுவதற்கு ஓராயிரம் வார்த்தைகளும் போதாது அவர்க்ள தங்கள் பல்வேறு இடுக்கண்களுக்கு மத்தியிலும் ஆற்றிவரும் உதவிகளை அடுக்கடுக்காகக் கூறலாம்.

கல்லூரி அன்னையின் கல்வி பெறுபேற்றின் பெருமைகளையும் மற்றும் சாதனைகளையும் அறிந்து மலையகம், தீவகம், வன்னிப் பிரதேசம் கிழக்கு மாகாணம் ஆகிய பல்வேறு பிரதேசத்தை சேர்ந்த மாணவர்கள் கல்லூரியின் பெருமையால் ஈர்க்கப்பட்டு கல்விப் பேட்டை நாடி தேடி வருகிறார்கள் இத்தகைய நிலைமையில் விடுதிசேவையின் தேவையை யாவரும் உணர்வார்கள். நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டை உணர்ந்த உங்கள் பழைய மாணவர் சங்கம் விடுதியை புனரமைத்து பொலிவுறச் செய்துள்ளது.

போர்ச் சூழலில் நலிந்து நொந்த மாணவர்கள் கல்வி மேம்பாட்டை நோக்காகக் கொண்டு விடுதிச் சபையை உருவாக்கி பெருந்தொகைப்பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளது இவ்வட்டிப் பணத்தின் மூலம்

ஆதரவற்ற மாணவர் 09 பேரை தெரிவு செய்து அனைத்து உதவிகளையும் வழங்கி விடுதியில் வைத்து பராமரித்து அறிவுக்கண்களை திறந்து வைத்துள்ளார்கள்.

பிரித்தானியாவில் வாழும் பழைய மாணவர்கள் பலர் பெற்றோரை இழந்தும் மற்றும் பல இழப்புக்களுடனும் வாழுகின்ற 18 மாணவர்களை பொறுப்பேற்று விடுதியில் வைத்து பேணிப் பாதுகாத்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேன்மேலும் பாதிக்கப்பட்ட வேதனைகளைத் தாங்கி நிற்கும் மாணவர்களின் தொகை அதிகரித்து செல்லுகின்றது இவர்களுக்கு ஆற்றுகின்ற மகத்தான சேவைக்கு ஈடாக எதுவும் இருக்காது என நம்புகிறேன். பிரித்தானியா பழைய மாணவர் உறுப்பினர்களின் ஆதரவுடன் நவீன வசதிகளுடன் மலசல கூடம் புதிதாக அமைக்கப்பெற்று மாணவர்களின் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறையில் உன்னிப்பாக கவனமெடுத்துச் செயற்பட்டதாலும் பழைய மாணவர்கள் வழங்கிய உதவிகளாலும் விளையாட்டுத்துறையில் பல சாதனைகள் படைத்தும் அண்மித்துமுள்ளோம். அவ்வகையில் நாம்பங்குபற்றிய சகல விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி வாகை சூடியுள்ளோம் கொழும்பு ஆனந்தாக்கல்லூரியுடனும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியுடனும் நடைபெற்ற துடுப்பாட்டப் போட்டியில் 9 விக்கட்டுக்களால் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளோம் ஆயினும் எமது கல்லூரி விளையாட்டுத்திடல் பற்றிய தொடர்நிலை கருத்தாடல் இடம் பெற்று வந்தாலும் முனைப்பான செயற்பாடுகள் முன்நகர்த்தப்படவில்லை. விளையாட்டுக்கள மேம்பாட்டுக்கு உருப்படியான செயற்பாடுகள் நம்பிக்கையுடன் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் இச்சந்தர்ப்பத்தில் விடுக்கிறேன். அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன். இவ்விளையாட்டுத்திடல் என்ற நிலைமாறி சிறந்த விளையாட்டு மைதானம் என மாறும் என நினைக்கின்றேன்.

2014 செப்ரெம்பர் முதல் 2015 ஒக்டோபர் வரையுள்ள காலப்பகுதியில் எமது அன்னையின் 125வது நிறைவிழாவை வரலாற்று சிறப்பு மிக்க பெருவிழாவாக அனுட்டிப்ப வேண்டும் இதற்கு உலகமெங்கும் பேரோடும் புகழோடும் வாழுக்கின்ற பழைய மாணவர்களும் சமூக நலன் விரும்பிகள் கல்விமான்கள் புலம்பெயர் தமிழ் மக்கள் கல்லூரியின் சகல துறை வளர்ச்சிகளிலும் பெரும் பங்காற்ற வேண்டும் கல்லூரி அன்னையின் பன்னாட்டு பழைய மாணவர் சங்கங்கள் அனைத்தும் ஆக்கமும் ஊக்கமும் ஆதரவும் அளிக்க வேண்டுமென கலை அரசியின் ஊடாக அறை கூவல்விடுக்கிறேன். நன்கு திட்டமிட்டு செயற்பட்டு வரும் பிரித்தானிய கிளை பழைய மாணவர சங்கத்தவர் முன்னோடியாகத் திகழ வேண்டுமெனவும் விரும்புகிறோம். எல்லோரும் ஒன்றிணைந்து தூரநோக்கில் சிந்தித்து 125வது அகவையில் தடம்பதிக்கும் நிறைவுடன் அடுத்த சந்ததியிடம் ஒப்படைப்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

கலையரசி சஞ்சிகை ஆண்டுதோறும் வெளிவரவும் மேன்மேலும் சாதனைகள் புரிந்து வளர்ச்சிபெறவும் வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட பக்கங்கள் தடம் பதிக்கவும் எல்லாம் வல்ல சிவஞான வைரவரின் திருவருளும் அலைகடலின் மத்தியில் அருள்பாலிக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருளொளியும் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்றேன்.

"எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன் அருள் கொடு நன்றே!"

என்று நினைந்து வியந்து போற்றுவோம் வாயார வாழ்த்துவோம் தாரகமந்திரமாக எம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்வோம்.



வீ.கணேசராசா
அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



## சங்கத் தலைவரின்
## வாழ்த்துச் செய்தி

எமது சங்கத்தின் 27வது ஆண்டு நிறைவையொட்டி இன்று நடைபெறும் இக்கலையரசி நிகழ்ச்சிக்காக வெளியிடப்படும் இம்மலருக்கு எனது வாழ்த்துச்செய்தியை செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த வருடம் புரட்டாதி மாதம் நடைபெற்ற எமது விழாவினைத் தொடர்ந்து Jolly Vybe 2013 ஐ இவ்வருட ஆரம்பத்திலும் அதனைத் தொடர்ந்து இன்று இவ்விழாவினைச் சிறப்பாகவும் எதிர்வரும் ஜீன் மாதம் கிரிக்கட் சுற்றுப்போட்டியையும் தொடர்ந்து எமது பாடசாலை பழைய மாணவர்களின் பிள்ளைகள் மட்டும் பங்குபற்றும் ஓர் கலைவிழாவையும் நடாத்த இருக்கின்றோம்.

அடுத்த வருடம் எமது கல்லுர்ரியின் 125 வருட கொண்டாட்டங்களை வெகு விமரிசையாகக் கொண்டாட கல்லூரியும் உலகில் உள்ள எல்லா பழைய மாணவர் சங்கங்களும் முனைந்து நிற்கின்றன. அனைவரும் ஒருமித்து திட்டமிட்டு இதனை ஆக்கபூர்வமானதாகவும் பிரமாண்டமான முறையிலும் நடாத்த உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கடந்த வருடமும் இவ்வருடமும் இணையத்தளங்களின் ஊடாக முகங்கள் முகவரிகள் இல்லாமல் சில குட்டிக்கதைகள் வந்தவண்ணம் உள்ளன. ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சி என்பது அதற்கு எதிரான கருத்துக்கள் பரப்பப்படும் விதத்தில் தங்கியுள்ளது.
இது குறித்து நாம் பெருமைப்படுகின்றோம்.

எமது கல்லூரியில் கல்வி கற்ற அனைவருக்கும் இந்தப் பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினர் ஆவதற்கு சகல உரிமைகளும் உண்டு. தயவு செய்து வெளியே இருந்து விமர்சிக்காமல் உள்ளே வந்து ஆக்கபூவ்மான கருத்துக்களை மோதி எமது பாடசாலைக்கும் வடக்கு கிழக்கில் உள்ள எதிர்கால சந்ததிக்கும் முன்னேற்றமான பயனுள்ள நடவடிக்கை எடுத்த உதவ வேண்டும் என்று வேண்டி நிற்கின்றேன்.

"கலைபயில் கழகமும் இதுவே
பல கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே"

அன்புடன்
க.ஸ்கந்தமூர்த்தி



# Message from Chief Guest

Professor Arumugam Nallanathan is an old boy of Jaffna Hindu College (1981-1983). After completing his G.C.E (A/L) at Jaffna Hindu College with 4As in 1983, he continued his graduate studies at University of Peradeniya, Cambridge University and University of Hong Hong. After obtaining his PhD in Electrical and Electronic Engineering, he joined as an Assistant Professor in the Department of Electrical and Computer Engineering at the National University of Singapore in 2000. After seven years at the National University of Singapore, he joined at King's College London in 2007, where he is currently a Professor of Wireless Communications. He has been the Head of Graduate studies (2011/2012) in the School of Natural and Mathematical Sciences at King's College London.

It gives me great pleasure to write this message for publication in the Souvenir of 'Kalaiyarasi 2014'. Souvenir is a tribute to the past and an expression of grateful thanks to those who had untiringly laboured to make the institution great and to honour those who contributed to its greatness.

Through the corridors of time, Jaffna Hindu College with its long and luminous history has been hailed the world over as a hallowed place. Every past pupil has gained something of value from his college for which he is grateful, and in return, he wants to reciprocate by giving something back to the college. All Jaffna Hindu College old boys associations around the world have one thing in common, an intense loyalty to the Alma mater and readiness to come to its assistance. It is here, the Jaffna Hindu College Old boys Association (United Kingdom) contributed significantly to the growth of the school over the past three decades. I wish it must proceed with renewed vigour to make the Jaffna Hindu College as the best school not only in education but also in all other areas including sports.

My best wishes to the Jaffna Hindu College Old Boys Association (United Kingdom) as it proceeds on its Journey.

**A. Nallanathan**
Professor of Wireless Communications,
King's College London

# JHCOBA(UK) COMMITTEE MEMBERS 2013 - 2014



President
Mr.K Skandamoorthy



Vice President
Mr P Vivekanandha



Secretary
Mr.S Thevarajah



Asst. Secretary
Mr C Nakeeran



Treasurer
Mr.P Baheerathan




Asst. Treasurer
Mr P Premkumar




Committee Member
Mr. Anpalagan



Committee Member
Mr K Premsankar



Committee Member
Mr P Navendran



Committee Member
Mr M Kurunathan



Committee Member
Mr Saba Suganthan



Committee Member
Mr T Pirabaharan

Committee Member - Mr S T Sanjeevraj

Hon. Auditor - M. Kirupananthavel

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (யாழ்ப்பாணம்)
**JAFFNA HINDU COLLEGE OLD BOYS ASSOCIATION (JAFFNA)**

# Message from Jaffna OBA



It is a great pleasure to pen this message to Jaffna Hindu College Old Boys' Association UK. We, the children of our alma mater, regardless of whoever we are and wherever we live experience the same affinity with our alma mater and close kinship among ourselves. We are all greatly indebted to the teachers who toiled hard to inculcate traits which were pivotal to the success stories for our brothers all over the world and we express our gratitude by contributing to the growth and development of our school which lays the foundation for the future of thousands of Hinduvites.

The OBA of Jaffna is actively involved in the development programmes with the support of the OBA of various countries. The toilet facilities were established with the support of the OBA- UK branch in the latter part of 2013. The hostel fund was also created with the financial contribution of the OBA-UK in the middle part of last decade and ten hostel students are supported from this fund. Further several other students who are accommodated at the hostel are also supported by individual members of the OBA-UK.

This kind of support and collaboration with the Jaffna OBA and school community continues from the inception of the OBA-UK and contribution is unfathomable. I sincerely hope that the cordial relationship will continue to thrive with the common aim of the betterment of our alma mater.

**Dr E Devanesan**
President
JHC OBA Jaffna

## எனது
# இந்துக் கல்லூரி




## Selvathurai Senthilnathan
Ex. President
JHC OBA UK - (2011 - 2012)


யாழ் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் "கலையரசி 2014" இவ்வருடம் ஏப்பிரல் ஐந்தாம் திகதி நடை பெறவுள்ளது. கல்லூரி வாழ்வின் பின் கல்லூரியில் வாழ்ந்த நாட்களை. இனிமையான பொழுதுகளை ஞாபகங்களை மீண்டும் மீண்டும் நினைவில் நிறுத்தி, மலர்ந்தும் மலராத, என்றும் பசுமையான நினைவுகளாக எம் கண்முன்னே கொண்டு வருவன பழைய மாணவர் சங்கங்களும் அவற்றால் நடாத்தப்படும் இது போன்ற நிழ்ச்சிகளும் என்றே கூறலாம்.

எனவே இம்முறை எனக்கு கொடுக்கப்பட்ட இந்த வாய்பை எனது கல்லூரி நாட்களையும், என் நினைவில் நிறைந்த சிலசம்பவங்களையும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமென்று நினைக்கின்றேன்.

யாழ் இந்துவில் நாலாம் வகுப்பு "ஏ" பிரிவில் சேர்ந்தேன், அதிபர் திரு. ஆசைப்பிள்ளை, வகுப்பு ஆசிரியர் கே. வி. மயில்வாகனம். 6ம் வகுப்பு. இரசாயன வகுப்பில் தொடர் வகுப்பு கொட்டகைகள் வகுப்பு ஆசிரியை செல்லையா டீச்சர், அதிபர் திரு. சி. சபாரத்தினம், 7ம் வகுப்பு அரைகுரை யாகக் கட்டப்பட்டிருந்த கட்டடம் "குமாரசுவாமி மண்டபம்" வகுப்பாசிரியர், திரு. செல்லத்துரை, 8ம் வகுப்பு, வகுப்பாசிரியர் கணேசலிங்கம், இந்த வகுப்பு படிக்கும்போது சுகவீனம் காரணமாக ஒரு வருடமும் பின்னர் விஞ்ஞானம், கலைப்பிரிவு என்ற குழப்பத்தில் மூன்று வருடங்கள் படிப்பில் பின்வாங்க வேண்டி வந்தது, 9ம் வகுப்பு மேல்பிரிவு வகுப்பு ஆசிரியர் திரு. கார்த்திகேயன், இங்குதான், முதல் முறையக விளையாட்டுத்துறையில் ஈடுபடதொடங்கினேன். இதை தொடர்ந்து Junior Cadet, P.T. Squad, Senior Cadet, Pasupathy House Captain என்று மிக வேகமாக ஓடிய என்பாடசாலை நாட்களை நினைத்துப்பார்க்கிறேன். Junior Cadet and Senior Cadet லும் டியத்தலாவலைக்குப்போய் Camp பண்ணுவதற்காக புகைவண்டியில் பயணம் செய்யும் நேரத்தில் பாட்டுக்கும் நடனத்துக்கும் பஞ்சமே இருந்ததில்லை. 1967ல் Senior Cadet Sergeant & Senior P.T. Squad Leader ஆகவும், ஒரு உடற்பயிற்ச்சி கற்றுக்கொடுப்பவனாகவும் இருந்தேன். 1968ல் உயர்தரவகுப்பின்போது மாணவர் தலைவனாக பின்னர் 1970ல் Senior Prefect (சிரேஸ்ட மாணவதலைவனாகவும்) கடமைபுரிந்துள்ளேன். படிக்கும் நாட்களில் பாதைகள் மாறி வழிதவறும் சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டதுண்டு அச்சமயங்களில் எல்லாம் தமது மேன்மையான பண்பினாலும் சாதுர்த்தியமாகவும் எம்மை நல்வழிப்படுத்திய ஆசிரியப்பெருந்தகைகளையும் அதிபர்களையும் மறக்கவே முடியாது. உதாரணமாக ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகின்றது. ஒரு நாள் பிற்பகல் நண்பர்களுடன் பாடசாலை கட்பண்ணிவிட்டு யாழ்ப்பாணம் வின்ஸர் தியேட்டரில் 2.30 மணி படம் பார்ப்பதற்காக வரிசையில் நின்றிருந்தோம். ஒரு சில நிமிடங்களின் பின் ஒரு மொறிஸ் கார் ஒன்று அருகில்வந்து நிற்பதை கண்டேன். அதில் இருந்து அதிபர் திரு. என். சபாரத்தினம் எட்டிப்பார்த்து செந்தல்நாதன் வாருங்கள் வந்து காரில் ஏறுங்கள் என்றார். இருவர் ஓடிவிட இருவர் காரில் ஏறி

அமர்ந்தோம். வழிதூரம் எதுவும் பேசவில்லை. பாடசாலையில் இறக்கி விட்டு வகுப்புகளுக்கு போகும்படி கூறிவிட்டு அவர் தமது இருப்பிடம் சென்று விட்டார். நாங்களும் அடுத்தவகுப்புக்கு சென்று விட்டோம். இது பற்றி யாரும் எதுவும் எம்மிடன் கேட்கவில்லை. பாடசாலை கட்பண்ணி படம் பார்ப்பதை அன்றோடு விட்டது மட்டுமல்லாது அதிபர்மேல் ஒரு பெருமதிப்பும், படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்ற எண்ணமும் தோன்றியது.

இன்னுமொரு சுவாரசிமான சம்பவம் இது Senior prefect ஆக இருக்கும்போது பாடசாலையில் மிகவும் கண்டிப்பானவனாக இருந்தேன். இதன்விளைவாக பாடசாலைக்கு வெளியே பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. பாடசாலைக்கு கெட்டபெயர் வராதவாறு அந்தப்பிரச்சனைகளை எதிர்நோக்கவேண்டி இருந்தது. ஒரு சமயம் நான் பாடசாலைவிளையாட்டு மைதானத்துக்கு அருகில்வரும்பொது இருமாணவர்கள் அங்கு நின்ற நான்கு வெளி ஆட்களிடம் பேசிக்கொண்டு நின்றார்கள். மாணவர்கள் என்னைக்காணவில்லை. ஆனால் அங்கு நின்ற வெளி ஆட்கள் என்னை கைகாட்டி ஏதோ சொல்ல அவர்கள் என்னை பார்த்து விட்டு தமது துவிச்சக்கரவண்டிகளை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். ஏன் அவர்கள் ஓடுகிறார்கள் என்று அவர்களை கேட்டபோது. யாரோ தங்கள் பாடசாலை Senior Prefect க்கு அடி போட வேண்டுமாம் காசு தருகின்றார்களாம் என்று சொன்னார்கள். பிரச்சனை இல்லை அதோ எங்கள் லீடர் வருகின்றார் அவரிடன் கேட்டுவிட்டு சொல்கின்றோம் என்று சொன்னோம். ஏனோ தெரியவில்லை உங்களை பாரத்தவுடன் ஓடுகின்றார்கள் என்று சொன்னார்கள். நான் சொன்னேன் அவர்கள் எனக்கு அடிக்கத்தான் பிளான் போட்டார்கள் என்று.

1970 July ல் எமது உயர்தர வகுப்பு பரீட்சை முடிவுகள் வெளியாகின. 1970 December ல் Peradeniya University enter பண்ணினேன். மாணவத்தலைவனாக இருந்ததாலோ என்னவோ றாக்கிங்ன்போது என்னை மிகவும் Special ஆக கவனித்தார்கள்.

1985இல் இங்கு ஐக்கியராட்சியத்திற்கு வந்தேன். 1987இல் யாழ் இந்து பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டபோது அந்த கூட்டத்தில் நானும் பங்கு பற்றினேன். தொடர்ந்து பல முறை நிர்வாக சபையில் கடமையாற்றும் சந்தர்ப்பமும் பின்னர் 2011 ல் President of JHCOBAUK ஆகவும் கடமையாற்ற முடிந்தது.

கல்லூரியின் உயர்விற்கும் அதன் தேவைகளை பூர்த்தி செய்யவும் எமது அங்கத்தவர்கள் யாவரும் ஒன்றிணைந்து உழைக்கின்றனர். கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் நின்று விடாது பலவித இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்துக்கும் உதவவேண்டும் எனும் பேராவாவினால் எமது மாணவர்கிடையே பரவலாக ஏற்பட்ட அபிப்பிராய பேதங்களால் இரண்டு நீர்வீழ்சிகள் போல இயங்கிவந்த எமது பழைய மாணவர் சங்கத்தை ஒரு பலம் வாய்ந்த சங்கமாக ஒருமைப்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் எனது தலைமைக் காலத்தில் கிடைத்ததை இட்டு நான் அளவில்லை மகிழ்ச்சி அடைகின்றேன்.

சங்கங்கள் இணைந்து செயல்படுகின்றன வெற்றி நிச்சயம். அங்கத்தவர்களின் மனங்களும் பூரணமாக நூறு வீதம் இணைந்து செயல்படுவதைப்பார்க்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

"வாழிய யாழ் நகர் இந்துக் கல்லூரி வையகம் புகழ்ந்திட என்றும்"

மறக்கமடியாக அதிபர்களும் ஆசிரியர்களும்......

- Principal Mr.C.Sabaratnam
- Principal Mr.N.Sabaratnam
- Teacher Mr.K.V.Mylvaganam (English)
- Teacher Mr.Ganesharathnam (English)
- Teacher Mr.Senathiraja (Physics)
- Teacher Mr.Chellathurai (Tamil)
- Teacher Mr.Mahadevan (Geography)
- Captain Parameswaran (Cadeting)
- Sports Mr.Thiyagarajah (Athletics & P.T)

மறக்க முடியாத நண்பர்கள் ஏராளம்

*20-03-2014*

BBK PARTNERSHIP

**Chartered Accountants**
**Registered Auditors**
**Business Recovery Professionals**




As cloud specilist our service includes
Management Accounting, Annual Accounts, Audits
Tax Planning, Corporations tax, Self-Assesment
Business Start-Up Advice, Book Keeping, VAT , Payroll
Training, Implementation, Telephone/Email Support

intuit QuickBooks.

- ✓ **Do business on the go**
- ✓ **Affordable low monthly fee**
- ✓ **Simple and easy to use**
- ✓ **Collaborate more effectively**

www.bbkca.com

**Promotional Price**
of just £4.99/month
contact Kandee on
020 8216 2520
quoting QB

New Branch opening soon
2a Ashfiled Parade, Southgate, London N14 5EJ

**Barnet Office**
1 Beauchamp Court
10 Victors Way
Barnet, Herts EN5 5TZ
Tel: **020 8216 2520**
Email: Admin@bbkca.com

**Cambridgeshire Office**
U9 South Fens Business Centre
Fenton Way,Chatteris
Cambs PE16 6TT
Tel: **01354 707 911**
Email: Cambs@bbkca.com

**Croydon Office**
Lombard House
2 Purley Way
Croydon CR0 3JP
Tel : **0208 150 9950**
Email: Croydon@bbkca.com

ICAEW CHARTERED ACCOUNTANTS
ICAEW LICENSED INSOLVENCY PRACTITIONER (UK)

# உயிர்ப்புள்ள நினைவுகள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி!
இதுவே கவிதை!
மூன்று சொற்களுக்குள் நான்படித்த
அற்புதக் கவிதை!

இந்த யுக கவிதையிலே,
ஒரு சில வார்த்தைகளை
எழுதிப் போவதில் அளவில்லா
ஆனந்தம்!

இந்துக்கல்லூரி என்னும்
ஆழம் காணமுடியா அனுபவத்தின்
அணுவளவு துறையை அடைக்க கிடைத்த
வாய்ப்பை அகிலம் உள்ளவரை போற்றும்
அடியவன் நான்!

இந்த சுதந்திரக் கூண்டுக்குள்
உலகத்தைக் கண்டோம்!
உலகமோ சிறிதாய் தெரிந்தது!
கல்லூரியோ பெரிதாய் விரிந்தது!

ஆறுதொடங்கி ஈராறு வரையில்
இங்கே தேக்கப்பட்ட நினைவுச்
சுனைகளின் நீரை திறந்து விடுகின்றேன்!

துரு ஏறிப்போன நுணுக்கு காட்டியை
திருகித் திருகி தாவரக்கலங்களை கண்டுவிட்டு
எம்மை விஞ்ஞானிகளாக்கி கொண்டோம்!

கல்லூரி மைதானத்தில் எம்கால்படாத
இடங்களை கடவுள் தான்
கண்டுபிடிக்க வேண்டும்!

ஆண்மை மிடுக்கோடு எழும் எம் கல்லூரியை,
"அன்னை" என்றழைத்து,
அன்பை கூட்டி கொண்டவர்கள் நாங்கள் !

நண்பனின் கைத்தாங்கல்களிலும்
வாத்தியாரின் கைத்தடிகளோடும்
கதைபேசி கொண்டவர்கள் நாங்கள்!

வேப்பம் பழத்தின் விதையெனப் பிதுங்கும்
நினைவுகளின் நிழல்களால்
இன்னும் கற்றுக்கொண்டிருப்பவர்கள் நாங்கள்!
விடுதலைப்போரில் வேங்கைகள் நாங்கள்!
விண்வெளி ஆய்வில் வீரர்கள் நாங்கள்!
விஞ்ஞானம் உயிரியல்
மெஞ்ஞானம் பயிரியல், எங்கும் நாங்கள்!

துடுப்பு இல்லாப் படகால்
சமுத்திரம் கடந்து காட்டிய சாணக்கியர்கள்
நாங்கள்!

இந்துக்கல்லூரியின் ஒவ்வொரு மரமும்,
ஆயுதம் தரித்த புத்தர்களை தந்த
போதி மரங்கள் தான்!

இந்துவின், ஒவ்வொரு வகுப்பறையும்
நாற்பது நாற்பது அக்கினிகுஞ்சுகளை,
அடைகாத்த தெருப்பறைகள் தான்!

கல்லூரிச் சுவர்களுக்கு மட்டும்
உணர்வுகள் இருந்தால், அழுதுவிடும்!
கைகள் இருந்தால்,
ஒரு காவியமே எழுதி விடும்!

அதிகம் உண்டு செமித்த
நண்பன் வீட்டுச்சாப்பாடு!
ஒவ்வொருநாள் காலையிலும்
முந்திக் கொண்டு இழுத்து அடிக்க துடித்த
ஆலய மணிக் கயிறு

விருப்பின்றி பிடித்த தும்புத்தடிகள்
மிதித்து நடந்த மாடிப்படிகள்!
பக்குவமாய் குத்தி தின்ற தேக்கம் விதைகள்
பலவாறு பேசித்திரிந்த காதல் கதைகள் .......

தாகத்தை மட்டும் அல்ல
பலதடவை பசியையும் தீர்த்து வைத்த
கல்லூரித் தண்ணீர்!
அடியை காட்டிலும்,
அதட்டலுக்குப் பயந்து நின்றது!
பரீட்சை வாங்குகளில் பல
சமன்பாடுகள் எழுதி வைத்தது .......

நினைக்க நினைக்க நெஞ்சம் விரிகிறது!
மெல்ல மெல்ல வயசோ குறைகிறது!

உயிர்ப்புள்ள கட்டிடங்கள்
இங்கு மட்டும் தான் உண்டு!
உவமை சொல்ல முடியாத
பிணைப்புக்கள் இங்கு மட்டுமே உண்டு!

ஒட்டு மொத்தத்தில் நாம் பெற்ற
கட்டற்ற செல்வம் இந்துக்கல்லூரி!
எங்கள் கல்லூரியில் பூத்த
காகிதப்பூக்கள் கூட கமகமக்கும்
மாயம் தான் அந்த பிணைப்பு!

ஜென்மங்கள் கடந்தாலும் நீடிக்கும் - இந்த
அன்னை - மைந்தன் இணைப்பு!

கடல் கடந்து போனாலும் .......
காலம் கடந்து போனாலும் .......
ஞலம் முடிந்து போனாலும் .......
இந்த உயிர்புள்ள நினைவுகள் .......
என்றென்றும் சிரஞ்சீவியே!

**ஜீவரட்ணராஜா ஷஜீவன்**
2013 க.பொ.த. (உ/த)
வணிகப்பிரிவு

*With best compliments*

*to*

# Kalaiyarasi 2014

*from*

*Mr & Mrs N Jeyarajan*

JHC 1983 A/L Batch

# யாழ் இந்துவெனும்
# பல்கலைக்கழகம்

**யாழ் இந்துகல்லூரி என்பதுவெறுமனே ஒரு உயர்தரபாடசாலை அல்ல மேலாக அதுபலகலைகளையும் கற்றுத்தரும் வாழ்வியல் பல்கலைக்கழகமே. கற்றல்கற்பித்தல் செயற்பாடுகளுக்கும் மேல் கல்விசாராபுற செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெறும் முதற்தர பாடசாலைகளில் யாழ் இந்துவே முதன்மையிடம் வகிக்கின்றது.**




குணரத்தினம் பார்த்தீபன்
உபதலைவர்
சிட்னிபழையமாணவர்சங்கம்


**"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல-நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமையால்**
**கல்விஅழகேஅழகு"**

என்றநாலடியார் வரிகளுக்கு இணங்க கல்வியறிவையும் அதனுடன் சேர்த்து ஒரு மனிதனை பூரணமாக்கும் வாழ்வியல் அனுபவங்களையும் கற்றுத் தருகின்றதுஎம் யாழ் இந்துக் கல்லூரி. இந்துவின் மைந்தர்களாகிய எமக்கு பன்னிரெண்டுவயதினிலே இந்தவாழ்க்கைப் பாடம் தொடங்குகின்றது. எமதுகல்லூரியில் பதினைந்திற்கும் மேலான புறசெயற்பாட்டு கழகங்கள் இயங்கிவருகின்றன. ஆசிரியர்கள் எமது கல்வித்திறனை வளர்க்கும் அதேவேளை கழகங்கள் எமக்கு பல்திறன்களை புகட்டி வருகின்றன.

காலையில் தினமும் பஞ்சபுராணம் வெள்ளிதோறும் சிவபுராணம், பின்னர் இவ்வார செய்திகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், பேச்சுப்போட்டிகள், தமிழ்த்தினங்கள், விஞ்ஞானதினம், ஆங்கிலதினம் ஆசிரியர்தினம், வீதியோட்டம், விளையாட்டுப்போட்டிகள், நவராத்திரி விழா, சிவராத்திரிப் பயணம், ஆங்காங்கேஒன்று கூடல்கள், மலர் வெளியீடுகள், இந்து இளைஞன், இந்துவிஞ்ஞானி, வரவு, துடுப்பாட்டம், உதைப்பந்தாட்டம், சதுரங்கம், என்றெல்லாம் பல நிகழ்வுகள் எம் கல்லூரி நாட்களை கடந்திருக்கும். இவையெல்லாம் வெறுமனே நிகழ்வுகள் அல்ல, எம்மை அறியாமலே எமைவளர்த்த அனுபவ பரீட்சைகள்.

இன்றுநாம் பல்துறை விற்பன்னர்களாக உலகெங்கும் வியாபித்து சுடர் பரப்பிக் கொண்டிருக்கின்றோம் என்றால் அதற்கு முழுமுதற் காரணம் இந்து அன்னையே. இதனை நாங்கள் ஒருபோதும் மறுக்கவோ மறக்கவோ முடியாது. இந்து மண் ஒரு புனித மண். இங்கு ஆன்மீக வருகையாக சுவாமி விவேகானந்தர் (1897), ஸ்ரீ ரவிசங்கர் அவர்களும் (2006), அகிம்சையின் வருகையாக மகாந்மாகாந்தியும் (1927) ஏன் அகிம்சையின் வளர்ப்பிடமாக தியாகி திலீபனும், அறிவியலின் வருகையாக டாக்டர் அப்துல் கலாமும் (2012) மற்றும் பல அறிஞர்கள், ஆன்மீகவாதிகள், தியாகிகளும் வருகை தந்திருக்கின்றார்கள். இது ஈழத்தமிழர்களின் ஓர் அடையாள சின்னம் ஓர் அணிகலன்.

இன்று உலகளாவிய ரீதியில் இந்துவின் பழைய மாணவர்கள் ஒன்பதிற்கும் மேலான சங்கங்களை அமைத்து வேறு எந்த சமூகத்திலும், எந்தவொரு கல்வி நிறுவனங்களுக்கும் இல்லாதவாறு உலகவலையமைப்புடன் கல்லூரி அன்னைக்குஉ தவிவருகின்றனர் என்றால் அது இந்த அன்னையின் வளர்ப்பின் பெருமையே.

**"கலைபயில் கழகமும் இதுவேபல**
**கலைமலிகழகமும் இதுவே தமிழர்**
**தலைநிமிர்கழகமும் இதுவே"**

கலைகள் மலிந்து கிடக்கும், பலகலைகளைபயிற்றுவிக்கும் நிறுவனமாகிய யாழ் இந்துகல்லூரி தமிழரின் தலை நிமிர் கழகமாகவும் விளங்குகிறது. இது ஒரு கல்லூரி என்பதைவிட வாழ்க்கையை கற்றுத்தரும் பல்கலைக்கழகம் என்று கூறினால் மிகையாகாது.

**"வாழியயாழ்நகர் இந்துக்கல்லூரி**
**வையகம் புகழ்ந்திடஎன்றும்"**








இந்துவின் வரலாறு

# இணையற்ற உந்து சக்தி



இராசரத்தினம் உதயராஜ்
(ஐக்கிய இராச்சியம்)
பழைய மாணவன் 1988
க.பொ.த உயர் தரம்

**"வரலாறு என்பது சமூகங்கள் தம் பழைய அனுபவங்களையும் பிரச்சினைகளை தீர்க்கும் முறைகளையும் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு ஏற்படுத்திக் கொண்டுள்ள ஆயத்தமாகும்"**

**-ஜி.ஜே.ரீனியர்**

சரித்திரம் ஆக்க முயற்சிகளுக்கு அத்திவாரமாக அமைகின்றது. இது மனித அனுபவங்களின் களஞ்சியம். பழைய சரித்திரம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். பழைய சரித்திரக் குறிப்புக்கள் இறந்த எண்ணக்கருக்கள் அல்ல. அவை உயிரோட்டம் உடையவை. வரலாறு ஒரு உந்து சக்தியாகும். எனவே நாம் நிறுவனங்களின் சரித்திரத்தை அறிந்து மேலும் அவைகளின் விருத்திக்கு தொண்டாற்ற வேண்டும். கல்லூரி வரலாறு என்பது கல்லூரியும் சமூகமும், குறிப்பாக பழைய மாணவர்களும் இணைந்து தொழிற்படும் பொழுது, ஏற்படுகின்ற சமூகப் பண்பாட்டு உருவாக்கமே எனலாம்.

1872ல் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆறுமுகநாவலர் பல சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிறுவினார். இப்பாடசாலையிலிருந்து கால் மைல் எல்லைக்குள் கில்னர் கலாசாலை இருந்தமையால் இப்பாடசாலையை சரிவர நடாத்த முடியவில்லை. பின்பு அவரின் அபிலாசையை நிறைவேற்றும் நோக்குடன் அவருடைய உறவினர்களும் ஆதரவாளர்களும் அவரின் பணியை தொடர்ந்தனர். உதாரணமாக இவரது மருமகனாகிய திரு. என். எஸ். பொன்னம்பலபிள்ளையும் வேறு சிலரும் இணைந்து 1888ல் சைவபரிபாலன சபையை ஸ்தாபித்தனர், இதன் பின்பு யாழ்.இந்துக்கல்லூரி உருவாகத் தொடங்கியது. 1890ல் இந்து உயர்பாடசாலை இச்சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரியின் பழைய ஆண்டு மலர்களில் அட்வகேட் நாகலிங்கம் என்னும் பெரியாரைத் தாபகராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1895ல் கு.யு (First in Arts) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 24.01.1987ல் சுவாமி விவேகானந்தர் இக் கல்லூரிக்கு விஜயம் செய்து விரிவுரை நிகழ்த்தினார். இக் கல்லூரியை 1960ல் அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை அதிகார சபை கல்லூரியின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

1904ல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வி எல்லைப் பரப்புக்குள் இலங்கை வந்தமையால் இக் கல்லூரி அதனுடைய இணைந்த கல்லூரியாகியது. 1906ல் கலாஜோதி ஆனந்தகுமாரசாமி கல்லூரிக்கு விஜயம் செய்தார்

1899ல் துடுப்பாட்ட கழகம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1904ல் உதைபந்தாட்டக் கழகமும் அமைக்கப்பட்டது. 1910ல் கொழும்புக் கிளை பழைய மாணவர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. 1911ல் "இந்துக் கல்லூரியின் கலண்டர்" என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது.

1911ல் இக்கல்லூரியின் கிளைப்பாடசாலைகள் கொக்குவில் இந்துக்கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, காரைதீவு இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. நெவின் செல்லத்துரை 30 ஆண்டுகள் அதிபராகக் கடமை ஆற்றி அரிய பெரிய சேவைகளைப் புரிந்தார். பொதுப் பரீட்சை முறை ஆரம்பிக்கப்பட்டது. 1926ல் சிறிது காலம் பிரித்தானியரான று.யு.வுசழரிந என்பவர் அதிபராகக் கடமை ஆற்றினார். இவர் இக் கல்லூரியின் ஒரே ஒரு ஐரோப்பிய அதிபராவார். இந்தியாவைச் சேர்ந்த மூன்று அதிபர்களும் கடமை ஆற்றியுள்ளார்கள். குறிப்பாக

1928ல் வி.ஆர்.வெங்கட்ராமன் அதிபராக அரும் பணி ஆற்றினார்.

1933ல் முதற் தடவையாக கல்லூரியின் பழைய மாணவரான திரு.யு.குமாரசாமி அதிபர் பதவியை ஏற்று 20 ஆண்டுகள் அளப்பரிய சேவைகளைப் புரிந்தார். இந்து மகளிர் கல்லூரி நிறுவுவதற்கு இவர் காலத்திலேயே அத்திவாரம் இடப்பட்டது. நடராசர் ஆலயம் அமைக்க முற்பட்டிருந்தார். பொன் விழாவும் பவள விழாவும் கொண்டாடப்பட்டது. இவர் அகில இலங்கை அதிபர்கள் சங்கத்தின் தலைவருமானார். இலங்கையின் தேசிய மொழிகள் அரச கரும மொழிகளாக ஆக்கப்படல் வேண்டும் என விண்ணப்பங்களை விடுத்தார். இவரது சேவையைப் பாராட்டி குமாரசாமி மண்டபம் அமைக்கப்பட்டது.

1954ல் ஆரம்பப் பாடசாலை கஸ்தூரியார் வீதியிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்பட்டதுடன் விளையாட்டு மைதானமும் விஸ்தரிக்கப்பட்டது. 1955ல் கல்லூரியின் தாபகரும் முதல் முகாமையாளருமான அட்வகேட் சி.நாகலிங்கம் அவர்களுடைய நூற்றாண்டு தின விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

1960ல் அகில இலங்கை ரீதியில் பௌதீக விஞ்ஞானத்துறையில் அதிக பல்கலைக்கழக இடங்களை பெற்றுக் கொள்வதில் யாழ் இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுச் சாதனை படைத்தது. இந்த ஆண்டிலேயே கல்லூரியின் நிர்வாகம் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது.

1961ல் இக் கல்லூரி அகில இலங்கைத் தரத்திலுள்ள பாடசாலைகளில் ஒன்றாக அந்தஸ்து பெற்றது. இக் காலத்தில் திரு.வி.எம்.ஆசைப்பிள்ளை அதிபராக இருந்தார். 1962ல் திரு.சி.சபாரத்தினம் அதிபரானார். சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இவருக்குப் பின் திரு.ந.சபாரத்தினம் பதில் அதிபரானார். அகில இலங்கைத் திறமைக்காக சாரணர் கொடி (ளுவயனெ ஆநசவை கடயப) கல்லூரியின் சாரணர் குழுவுக்கு கிடைத்தது.

1975ம் ஆண்டு வைரவிழா கொண்டாடப்பட்டது. விழா மலராக ஷஷஇந்து இளைஞன்" சிறப்புற வெளியிடப்பட்டது. பல துறைகளிலும் பலரின் பங்களிப்போடு கல்லூரி சிறப்படைந்தமை பலரின் உள்ளங்களைக் குளிர வைத்து உற்சாகப்படுத்தியது. பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமாக பல சாதனைகள் படைக்கப்பட்டன. பின்பு திரு.எம்.கார்த்திகேசன் சிறிது காலம் அதிபராகக் கடமை ஆற்றினார். பின்பு திரு.ஈ.சபாலிங்கம் கடமை ஏற்று கல்வித்துறையில் சில சாதனைகளைப் படைத்தார்.

1975ல் திரு.ஈ.சபாலிங்கம் இளைப்பாறிய பொழுது மீண்டும் ஒரு பழைய மாணவர் திரு.பி.எஸ். குமாரசாமி சகலகலாவல்லவனாக சாதனைகளைத் தொடர்ந்து படைத்தார். பழைய மாணவர் சங்கம், கொழும்பு கிளை புனரமைக்கப்பட்டது. இதன் உதவியுடன் ஜனாதிபதி நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் பெற்று கட்டிடத்துறை சார்ந்த வேலைகள் பெருமளவு பூர்த்தியாக்கப்பட்டது. விளையாட்டுத்துறை சாதனைகளை அகில இலங்கை ரீதியில், மாவட்ட ரீதியில், எமது கல்லூரி படைத்தது. பாடசாலையின் அதிபர் திரு.பி.எஸ். குமாரசாமி, சிறந்த அதிபர் என்ற விருதினை இரண்டு தடவைகள் பெற்றார். அதிபர் திரு.பி.எஸ். குமாரசாமி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு.எஸ்.பொன்னம்பலம் அதிபரானார். கல்லூரியின் சாதனைகள் தொடர்ந்தன. 1987ல் ஆரம்பித்த தடங்கல்கள், சோகம் நிறைந்த சம்பவங்களுக்கு வழிவகுத்தன. விபரமாகக் கூற முடியாமைக்கு வருந்துகிறோம். 1987ல் இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது கல்லூரி அகதி முகாம் ஆகியது. 20 நாட்களில், 40 ஆயிரம் அகதிகளை அரவணைத்து புகலிடமும் தந்தது. இதன் பின்னரான சம்பவங்கள் நீங்கள் அறிந்தவையாகும்.

1987ல் கல்லூரி பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய கிளை ஆரம்பிக்கப்பட்டது.

1990ல் திரு.கே.எஸ்.குகதாசன் அதிபரானார். பல க்'டங்களுக்கு மத்தியில் சிறப்பாகக் கடமை புரிந்தார். பின்பு திரு.அ.பஞ்சலிங்கம் அதிபரானார். தேசியக் கல்லூரி என்ற வகையில் அரசின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உதவியுடன் சிறப்பாகக் கல்லூரி பல் துறைகளிலும் அபிவிருத்தி அடைய அதிபர் நன்கு முயற்சிகளை மேற்கொண்டார். மைதான விரிவாக்கம் இவற்றுள் முக்கியமாக குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

1994ல் பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை பத்மஸ்ரீ ஜேசுதாசின் இன்னிசைக் கச்சேரியை நடாத்தி சுமார் 10 இலட்சம் ரூபாயைச் சேகரித்தது. இதன் மூலமாக 3 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது.

14.01.1994ல் "பழைய மாணவர் நிதியம்" அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

(மிகுதி அடுத்த மலரில் தொடரும்)

# KALAIYARASI 2013
















# WELCOMING DEVELOPMENT OF UK JHC OLD BOYS AND THEIR YOUNG CUBS PARTICIPATION IN PROMOTING SPORT

Sports play a key role in the education system of the developed world. Therefore it is important to give equal priority to exercise and education. To this effect cricket has been introduced as a key sport within our community in the UK. Even though introduced as a gentlemen sports of upper echelon of the British society in the old days, cricket has captured the imagination of common individuals from every corner of the world. So it is no surprise that JHC old boys also adopted a similar resolve to introduce this sport to our next generation of youngsters. As we grow older, this imperative and reality gives us more impetus to engage our youngsters in sports and exercise as an integral part of our OBA sports activity. Let us analyse our activities to date on this venture in a bit more detail.

We have ensured these youngsters participate in most, if not all; such sports events that took place in London organised by other School's OBA from our beloved nation. At a time when Tamils migrating to UK has suffered a downward trend, it gives us more focus to ensure that remaining youngsters are kept engaged with sports activities organised by our OBA. Otherwise we may face a situation, over time, our youngsters would be dis-engaged from this virtual link we have with our community in the UK and with our beloved old school. The following activities we have organised, we view them as small but firm stepping stones in the right direction:

1. Accumulating basic information of member's children, identifying their skills and grouping them accordingly.
2. Participating of these groups in TSSA and similar tournaments that has taken place in the last few years.
3. Specifically participation of children teams in Battle of Blues 2013 tournament for the first time.
4. Prize giving event at Jolly Vibe 2013 – Dinner Dance.

While these are small but measurable achievements, we are absolutely confident that the parents and their children will continue to support us to take the agenda to the next phase, especially following such and encouraging and attractive event to reward and promote their skill and achievement thus far.

Our Future Plan:

1. Expanding the numbers by enrolling more children of OBA members in the UK.
2. To absorb youngster who are shining stars in cricket into the OBA's adult cricket team.
3. Provide additional training facilities and opportunities as appropriate, to develop mutual friendships and relationships between children.
4. Identify individual talents in their area of sports and provide additional training facilities to encourage them to excel.
5. With the help of our adult team members organise cricket workshops.
6. To organise and conduct mini sports competitions within JHC OBA groups.
7. In consultation with our colleagues around the globe, to engage in all feasible efforts to enhance the standards of our worldwide JHC OBA members' children teams

As you can see we have an ambitious plan for our children's sporting activities. As such we modestly request all our members to support us and realise our future plan.

Thank you

## RECENT ACHIEVEMENT OF OUR JUNIOR TEAM'S

1. TSSA 2013 - Champion Under 14
2. TSSA 2013 – Runners up Under 16
3. Battle of Blues 2013
4. Jolly Stars 2013

# Battle of Blues UK - 2013

















# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விடுதி
# அன்றும் இன்றும்

பேராசிரியர்.கா.குகபாலன்
விடுதி மாணவன் 1965 - 1967
புவியியற் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கும் புகழுக்கும் மிகப் பிரதான பங்கு வகித்து வருவது விடுதிச்சாலை என்றால் மிகையாகாது. விடுதியில் தங்கிக் கல்வி கற்கும் மாணவர்கள் தமது ஆளுமை விருத்தியினை அதிகரிப்பதுடன், கல்விப் புலமைக்கான தேடல்களை மேற்கொள்ளவும் தலமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொள்வதிலும் சக மாணவர்களுடனான சகோதரத்துவத்தினை இறுக்கமாக்கிக் கொள்வதற்கும் பாடசாலையில் கற்கும் காலத்திலும் சமூகத்தில் இணைந்து வாழும் காலத்திலும் கௌரவமான பிரஜையாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதற்கும் தன்னை ஆளாக்கிய கல்விச் சாலையின் கல்விசார், கல்விசாரா வளர்ச்சியில் பங்கேற்பதற்கான மன இயல்புகளை உருவாக்கிக்கொள்வதற்கும் இவை தவிர இன்னோரன்ன நற்கருமங்களை சமூகத்திற்கு ஆற்றவும், விடுதியும் அங்கு வாழ்ந்த வாழ்வும் பிரதான பங்கினை வகிக்கின்றது. அதுமட்டுமல்லாது வாழ்வில் ஒழுக்க சீலராக வாழ்வதற்கும் இன, மத, மொழி, சாதி வேறுபாட்டுக்கு அப்பாற்பட்ட தூய மனிதனாக சமூத்தில் உலாவுவதற்கும் விடுதியில் வாழ்ந்த வாழ்வு பெரும் பங்குகொண்டுள்ளது.

ஒரு பாடசாலையில் இயங்கிவரும் விடுதிச்சாலையில் தங்கிக் கல்வி கற்பவர்கள் எல்லோரும் பல்வேறுபட்ட பொருளாதார சமூக, பண்பாட்டுப் புலத்திலிருந்து வருபவர்கள். அவர்கள் அனைவரையும் பொதுமைப்படுத்தி சமூக விழுமியங்களை உள்வாங்கச்செய்து சமூகத்திற்கு அளிக்கும் ஒரு நிறுவனமாக விடுதிச்சாலை இயங்குகின்றது. அதுமட்டுமல்லாது விடுதிச்சாலையிலிருந்து கல்வி பயின்ற ஒவ்வொரு மாணவனும் தங்களிடையே உறவுகளை மேம்படுத்துவதற்கு குறிப்பாக உறவுகளை நீடித்து நிலைப்பதற்கும் விடுதிச்சாலை வாழ்க்கை ஒரு காத்திரமான அத்திவாரமாக அமைவதையும் காண முடிகின்றது.

இந்தவகையில் இலங்கையில் புகழ் பூத்த யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் கல்லூரியில் இயங்கிவரும் விடுதிச்சாலைக்கு பெரும் பங்குண்டு என்பது கல்லூரிச் சமூகத்தினரின் ஏகோபித்த கருத்தாகும். இவ்விடுதியில் இருந்து கல்வி கற்ற மாணவர்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வுக்கு ஒளியூட்டியுள்ளது. மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, பேராசிரியர்களாக, பல்வேறுபட்ட தொழில் வல்லுநர்களாக அதற்கும் மேலாக நல்ல பண்புள்ளவர்களாக சமூகத்திற்கு வழங்கிய பெருமைக்குரியது யாழ். இந்து விடுதிச்சாலை.

யாழ். இந்துக்கல்லூரி 1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1891ஆம் ஆண்டு அப்போதைய நிர்வாகத்தினரால் விடுதி ஒன்றினை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இவ்விடுதி தவிர்க்க முடியாத காரணிகளால் செயலிழந்து விட்டது. இதனைத் தொடர்ந்து முன்னாள் அதிபர் ஜி. சிவராஜ" அவர்களின் பெரும் முயற்சியினால் 30.05.1910 ம் ஆண்டு மீண்டும் விடுதி நிறுவப்பட்டது. அன்றிலிருந்து 1992ம் ஆண்டு வரை விடுதி படிப்படியான வளர்ச்சியடைந்து 300 மாணவர்கள் தங்கிக் கல்வி கற்கும் அளவிற்கு உயர்வடைந்திருந்தது.

1910ம் ஆண்டிலிருந்து பல ஆசிரியர்கள் விடுதி ஆசிரியர்களாக இருந்து செயற்பட்டுள்ளனர். குறிப்பாக எஸ். வீரசுவாமிப்பிள்ளை, எம். சபாரத்தினசிங்கி, ஏ.கே.இளையதம்பி, கே.நவசிவாயம், வி.எம். வியாகேசு போன்ற பலர் ஆரம்பகால விடுதி அதிபர்களாக இருந்துள்ளனர். இருந்த போதிலும் நாம் அறிந்த வரையில் விடுதிக்காவலனாக ஒவ்வொரு மாணவரின் பால் அளவற்ற அன்புடன் கூடிய ஒழுக்கத்தினை நிலைநிறுத்துவதில் பெருமகனாக எல்லோராலும் அன்பாக (கே. எஸ். எஸ்) என்று அழைக்கப்பட்ட கே.எஸ். சுப்பிரமணியம் அவர்கள் விடுதியில் வாழ்ந்த ஒவ்வொரு மாணவனுககும் தந்தையாகவிருந்த பெருமைக்குரியவர். 1926ம் ஆண்டு பதவியேற்ற (கே. எஸ். எஸ்) 1970ம் ஆண்டு வரையும் விடுதி அதிபராக இருந்து கல்லூரிச் சமூகத்தினை சர்வதேச மயப்படுத்திய பெருமைக்குரியவராக இருந்துள்ளார். இன்று அவர் எம்மிடையே இல்லாதுவிடினும், அவரிடம் கல்வி கற்ற, அவர் காட்டிய நல்வழியில் வாழ்ந்து வரும் விடுதி மாணவர்கள் வாழும் வரை அவரது நாமத்தினை உச்சரித்துக்கொண்டே இருப்பார்கள் என்பது திண்ணம். கே. எஸ், எஸ் அவர்களைத் தொடர்ந்து கே.சிதம்பரநாதன், அ.சிறிகுமரன், எஸ்.சந்தியாபிள்ளை, சு.ஏகாம்பரநாதன்,

க.சிவராமலிங்கம்பிள்ளை, க.சண்முகசுந்தரம், கப்டன். நா.சோமசுந்தரம் போன்ற பலர் விடுதி அதிபர்களாகவும், உப அதிபர்களாகவும் கடமையாற்றி விடுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரணாக விளங்கியுள்ளனர்.

### விடுதியினை மீள ஆரம்பித்தல்

1980களைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையினைத் தொடர்ந்து 1992ஆம் ஆண்டு விடுதிச் சாலையின் செயற்பாட்டினைத் தற்காலினமாக நிறுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் தூரப் பிரதேசங்களிலிருந்து குறிப்பாக தென்னிலங்கை, வன்னி, தீவுப்பகுதி, வடமராட்சி போன்ற பிரதேசங்களிலிருந்து வந்து விடுதியில் தங்கி கல்வி கற்கும் நிலைக்கு தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையானது கல்லுரி மாணவர்களின் பெறுபேற்று அடைவு மட்டத்தினைப் பாதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விடுதியின் செயற்பாட்டினை மீள இயக்க வேண்டுமென பாடசாலை சமூகமும் பழைய மாணவர்களும் விருப்பம் கொண்டவர்களாக இருந்துள்ள நிலையில் 2005ஆம் ஆண்டு பதவியேற்ற அதிபர் திரு.வீ.கணேசராசாவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. 15 ஆண்டுகளுக்கு மேலாக விடுதி செயற்படாத நிலையில் விடுதிக் கட்டடங்கள், சமயலறை, மாணவர் தங்குமிடங்கள் என்பவற்றைப் புனரமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இவை தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இயங்கிவரும் பழைய மாணவர் சங்கங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

2001ஆம் ஆண்டு நடப்பாண்டு ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்க நிர்வாகக்குழுவின் தலைவர் திரு.பிரான்சிஸ் மரியதாஸ் அவர்களினது முயற்சியின் விளைவாக யுத்தத்தினால் பாதிப்படைந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வரும் மாணவர்களினது கல்வியை மேம்படுத்துவதற்கு குறிப்பாக விடுதியில் தங்கி கல்வியை தொடரவென 2.3 மில்லியன் ரூபாவினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த நிதியிலிருந்து பெறப்படும் வட்டியினை விடுதிக்கு அனுமதிக்கப்படும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்கள் பயன்பெறவென ஒரு சபை நிறுவப்பட்டது. அதில் காலஞ்சென்ற கலாநிதி.க.சிவராமலிங்கம்பிள்ளை அவர்களைத் தலைவராகக்கொண்டு கலாநிதி. ஆறுதிருமுருகன், பேராசிரியர் கா.குகபாலன், திரு. பி.மரியதாஸ், அதிபர், பழைய மாணவர் சங்கப் பொருளாளர் சிறிதரன் ஆகியோர் அங்கத்தவர்களாகச் செயற்பட்டனர். எனினும் மாணவர்களை விடுதியில் இணைப்பதற்கான சூழ்நிலை அக்காலத்தில் ஏற்பட்டிராததால் மாணவர்கள் உள்வாங்கப்படவில்லை.

அதிபர் திரு.வி.கணேசராசா அவர்கள் விடுதியினை மீள இயங்க வைக்கவென மேற்குறித்த சபையின் அங்கத்தவர்களுடன் வேறு சில அங்கத்தவர்களையும் உள்வாங்கி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விடுதிச்சாபை என ஒரு அமைப்பை உருவாக்கினர். இதன் தலைவராக அதிபரும் செயலாளராக திரு.இரா.செல்வ வடிவேல் அவர்களும் செயற்பட்டு வந்தனர்.

விடுதியினை இயக்கிவைப்பதற்கு அதிபரும் விடுதிச்சபையினரும் பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்த போதிலும் 2009ஆம் ஆண்டு வரை விடுதியினை மீள இயங்க வைப்பதில் புறச்சூழல் இடம்கொடுத்திருக்கவில்லை. இருப்பினும் அதிபரின் முயற்சி தொடர்ந்தது. 2006இல் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத் தலைவராக இருந்த திரு.வை.சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியின் பயனாக ஒரு தொகைப் பணத்தினை யாழ் இந்துப் பழைய மாணவர் சங்கத்திற்கு அனுப்பி விடுதி புனரமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விடுதியை ஆரம்பிக்கும் பொருட்டு, விடுதி அதிபராக திரு.சிவஞானசுந்தரம்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டார். வர்த்தகப் பட்டமாரியான இவர் கல்லூரியில் 15 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். முதல் 16 மாணவர்கள் விடுதியில் அனுமதிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விடுதியின் வள வாய்ப்புக்களை அதிகரித்து 50 மாணவர்கள் தங்கி படிக்கக்கூடிய வசதிகளை கல்லூரியின் பழைய மாணவர்களின் உதவியுடன் செய்யப்பட்டது. இந்நிலையில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 35 மாணவர்கள் உள்வாங்கப்பட்டனர். இவர்களுக்கான ஆரம்ப செலவுக்காக இந்துக்கல்லூரி நிதியத்தின் தலைவர் திரு.கைலாசபிள்ளை அவர்கள் 112000ரூபா பண உதவியினை வழங்கியிருந்தார். அதனைத்தொடர்ந்து பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியத்தின் தலைவராக இருந்த திரு.க.செவ்வேள் அவர்கள் 100000 ரூபா பெறுமதியான 27 தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றினை விடுதிக்கு அன்பளிப்பு செய்தார்.

கல்லூரி அதிபர் ஐக்கிய இராட்சியத்திற்குச் சென்றபோது வன்னியில் போரினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளின் கல்வியை முன்னெடுக்கும் நோக்கில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியத்தினால்

18 மாணவர்களை விடுதியில் இணைத்துக் கல்வி பயிலவென மாணவன் ஒருவனுக்கு மாதமொன்றுக்கு 5000.'.ஸ்ரீ வீதம் வழங்கப்பட்டது. இவர்கள் தற்போது விடுதியில் தங்கி கல்வி பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கனடாவில் வாழ்ந்துவரும் கல்லூரியின் பழைய மாணவர் திரு.சந்திரமோகன் என்பவர் 2009ஆம் ஆண்டிலிருந்து 4 மாணவர்கள் விடுதியில் தங்கி கல்வி பயிலவென தலா 5000.'.ஸ்ரீ ரூபாவினை மாதமொன்றுக்கு வழங்கிவருகின்றார். இது தவிர யாழ்ப்பாணம் வைச பரிபாலன சபைத் தலைவராக இருந்த காலஞ்சென்ற சண்முகலிங்கம் அவர்களின் மருமகன் விடுதித் தேவையின் பொருட்டு ஒன்பது புதிய அலுமாரிகளை வழங்கியுள்ளார். யாழ் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் ரூபா 50000 பெறுமதியான கட்டில், மெத்தைகளை மாணவர் தேவைகருதி வழங்கியுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஐக்கிய இராச்சிய முன்னாள் தலைவர் திரு மரியதாஸ் அவர்களினால் அனுப்பப்பட்ட பணத்திலிருந்து வரும் வட்டியினைப் பெற்று வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை இணைக்கும் முயற்சியானது 2013 ஆம் ஆண்டு பதவியேற்ற வைத்தியகலாநிதி.இ.தேவநேசன் தலைமையிலான யாழ் இந்து பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியின் பயனாக குழுவொன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவில் வைத்தியகலாநிதி பி.நந்தகுமாரன், அதிபர். வி.கணேசராசா, வைத்தியநிபுணர்.பி.லக்ஸ்மன், பேராசிரியர் கா.குகபாலன், திரு.எம்.கணேசராசா ஆகியோர் கடமையாற்றி வருகின்றனர். நாடாளாவிய ரீதியில் மாணவர் உள்ளீர்ப்புக்காக விண்ணப்பம் கோரப்பட்டபோதிலும் 5 மாணவர்களே விடுதியில் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்காக மேற்குறித்த நிதியிலிருந்து பெறப்படுகின்றது.

இந்நிலையில் 2015ஆம் ஆண்டு யாழ் இந்துக்கல்லூரி விடுதியில் மேலும் 100 மாணவர்களினை இணைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது நூல்நிலையமாக இருக்கும் விடுதிக்கட்டிடம் விரைவில் விடுதிச் செயற்பாட்டிற்கு வழங்கப்படவுள்ளது. நூல்நிலையம் புதியகட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. எனவே 2015ஆம் ஆண்டு மீண்டும் விடுதியானது பதுப்பொலிவு பெறும் என நம்பலாம்.


இவைதவிர விடுதி மாணவர்கள் தேவைகருதி லண்டனில் வாழ்ந்து வரும் பழைய மாணவர்கள் ஒன்றுசேர்ந்து எட்டு இலட்சம் ருபா செலவில் நவீன முறையிலமைந்த மலசலகூடம் அமைத்துக் கொடுத்துள்ளனர். விடுதியில் தற்போது மூன்று சமையலாளர்களும் ஒரு சுத்திகரிப்புத் தொழிலாளியும் கடமையாற்றி வருகின்றனர்.
விடுதியினை மீளச் செயற்பட ஆவன செய்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேலும் விடுதி முழுமையாக இயங்குவதற்கு இன்னும் பல விடயங்கள் பூர்த்தியாக்கப்பட வேண்டியுள்ளது. அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு எஞ்சியுள்ள வேலைத்திட்டங்களுக்கு உதவிட இந்துவின் மைந்தர்கள் முன்வர வேண்டும். அது காலத்தின் கட்டாயமாகும்.

1992ஆம் ஆண்டு நாட்டின் சூழ்நிலையின் விளைவாக செயலிழந்தது. யுத்த ஓய்வுக்குப் பின்னர் 17ஆண்டுகளுக்குப் பின்னர் 2009ஆம் ஆண்டு மீண்டும் விடுதிச் சாலை இயங்குவதற்கான முழு முயற்சியில் தற்போதைய அதிபர் திரு .வி.கணேசராசா வெற்றிபெற்றுள்ளார். விடுதிச்சாலையின் அதிபராக முன்னாள் கல்லூரி ஆசிரியராக என்.சிவஞானசுந்தரம்பிள்ளை அவர்கள் பொறுப்பேற்று கடமையுணர்வுடன். இன்றுவரை செயலாற்றி வருகின்றார். இன்றைய சூழலில் அவர் இந்துக்கல்லூரிச் சமூகத்தினரால் பாராட்டப்பட வேண்டியவர்.

இந்து மைந்தர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்
தற்போது விடுதிச் சாலையில 48 மாணவர்களே தங்கி கல்வி பயின்று வருகின்றனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விடுதியில் இயங்கிவரும் நூல் நிலையம் மிக விரைவில் புதிதாக கட்டப்பட்டு வரும் நூல் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. எனவே புதிய விடுதிக் கட்டடத்தில் 100 மாணவர்களை இணைத்துக்கொள்ளக்கூடிய வள வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் அவர்களுக்கான அடிப்படை வசதிகளான கட்டில், மெத்தை, அலுமாரி போன்றவை தேவைப்படுகின்றன. எனவே இந்துவின் மைந்தர்கள் தங்களாலான பங்களிப்பை நல்குமாறு இச்சந்தர்ப்பத்தில் வேண்டிக்கொள்கின்றேன்.

A Tribute to Our
Past Patron & Distinguish
Old Boy of Our College

# NAGALINGAM SIVAPATHASUNTHARAM



## 15th September 1943 - 11th February 2014

JHC (OBA) UK

# Foundation estate agents



Independent Sales & Letting Agent

Moving is a busy and exciting time and we're here to make sure the experience goes as smoothly as possible by giving you all the help you need under one roof.




Residential Sales & Lettings

Short Term Lettings

Management

Mortgages







## Paddington Branch

7 Spring Street
Paddington
London W2 3RA

Tel 0207 262 6060
Fax 0207 262 5838

info@foundationestates.co.uk



# இந்துக்கல்லூரியும் பிற மதங்களும்



இந்துக்கல்லூரியின் வரலாறு இந்துசமய விழிப்புணர்ச்சியோடு தொடர்புடையது என்பதை யாராலும் மறுக்கவும் முடியாது மறக்கவும் முடியாது. நீண்ட அந்நிய காலனித்துவப் போராட்டத்தோடு போட்டி போட்டுக்கொண்டு அன்றைய இந்துக்களின் தேவைக்கேற்ப எமது பாடசாலை உருவாகியது. பல இந்துமத குருமார்கள், வர்த்தகர்கள், ஆங்கிலேயக் கல்வி முறையில் வந்த இந்துப் பெரியவர்களால் இப்பாடசாலையின் அடித்தளம் அமைக்கப்பட்டது யாவரும் அறிந்த உண்மை.

இந்துசமயம் கட்டுத்தளம் ஆட்டம் பெற்ற அந்தக்காலத்தில் சமயத்திற்காக மொழித்திறன், அறிவாற்றல், இந்து சமயவெறி போன்ற அனைத்துத் தகுதியும் கொண்ட ஆறுமுக நாவலர் தன் அவாவின் மிகுதியாலும் இந்துக்கல்லூரிக்கு அடித்தளம் ஈட்டப்பட்டது எனலாம். உடுவில் பெண்கள் கல்லூரியில் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் பெண்களின் உரிமையை அடிப்படையாகக் கொண்டும், கிறிஸ்தவ மதத்தை அதன்மேல் வைத்தும் இந்து சமய சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தகாலம் அக்காலம். இந்து மதத்தவர் அதன் அடித்தளமான வேதத்தின் அடிப்படைகளை மறந்து வர்ணபேதம் என்னும் மனு நீதிக்குப் புறம்பான வாழ்கை அடிப்படையை நுகர்ந்துகொண்டிருந்தனர். இந்தக்கால கட்டத்தில் தேசிய எழுச்சிகளும் போராட்டங்களும் பிரித்தானிய ஆளும் வர்க்கத்திற்கு எதிராகக் கோசமிடப்பட்டபோதும், தமிழ் மக்களின் முற்று முழுதான விடிவுக்கு யாரும் நிரந்தரத்தீர்வை முன்வைக்கவில்லை.

இக்கலகட்டம்தான் இன்று மீண்டும் இங்கு நினைவு கூறப்படவேண்டியுள்ளது. இந்துக்கள் மீது கிறிஸ்தவம் எவ்வாறு தனது ஆளும் வர்க்கத்துடன் சேர்ந்து மற்ற மதத்தவரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள மறுத்ததோ, அதேபோன்ற புறக்கனிப்புத்தான் இன்னும் யாழ் இந்துக்கல்லூரியில் பிற மதத்தவருக்கும் அளிக்கப்படுகின்றது. 1979களில் யாழ் இந்துக்கல்லூரியில் மாணவனாக இருந்தபோது எனது சக கிறிஸ்தவ, முஸ்லீம், நண்பர்கள் பாடசாலையில் சமய பாடத்தில் புறக்கணிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து பார்க்கின்றேன். நாங்கள் நாற்பத்தைந்து மாணவர்கள் மொத்தமாக ஒரு வகுப்பில், அதில் மூவர் கிறிஸ்தவராக இருந்தனர். சைவசமயப் பாடநேரம் மூவர் கிறிஸ்தவராக இருந்தனர். சைவசமயப் பாடநேரம் அவர்கள் பிரார்த்தனை மண்டபத்தில் தனித்துவிடப்பட்டதையும், அவர்கள் அங்கே தவித்துக் கொண்டு இருக்கின்றார்கள் அல்லது இருந்தார்கள் என்பதும் எமது மன உளச்சல்.

இந்துக்கல்லூரியில் பல கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இருந்தபோதும் எவரும் அவர்களின் சமயத்தைக் கற்பிக்காதது அல்லது பாடசாலை நிர்வாகம் அன்று அதைச் செய்யாதது எனது மனதில் இன்றும் பெரும் உளைச்சலைக் கொடுத்துக்கொண்டு இருக்கின்றது. இலங்கையில் ஒரு மதத்தினர் இன்னொரு சனத்தொகை குறைந்த மதத்தினருக்கு தமது ஆதிக்கத்தை செலுத்துவது எமது கண் கூடாகக் காணக்கூடிய விடயம்தான். இருந்தும் சகிப்புத்தன்மை, காருண்யம், கொல்லாமை இவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த தர்மத்தில் வளர்ந்தவர்கள் இதைக் கண்டும் காணாதவாறு இருப்பது எமாற்றத்தை தருகின்றது.

ஜனநாயகம் வாக்குரிமையை மட்டும் அல்ல ஒருவனுடைய அடிப்படை உரிமைகளையும் பகிர்ந்து கொள்ளவேண்டும். ஒஸ்மேனியாக் கல்லூரி இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் இருந்தாலும், இஸ்லாமியர் சிலரும் யாழ் இந்துவில் கல்வி கற்றனர் என்பது உண்மை. அவர்களுக்கும் இதே கதிதான் பரிசாக வழங்கப்பட்டதோ வழங்கப்படுகின்றதோ என்பதுதான் கேல்விக்குறி......

இன்றை நவீன உலகில் முதலாளித்துவத்தின் கையோங்கிப் பல்தேசிய கம்பனிகள் உலகை ஆள எத்தனிக்கின்றன. இருந்தும் தமது நம்பிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தான் நேசிக்கும், அல்லது பிறப்பால் இணைக்கப்பட்ட மதங்களைப் பின்தொடர்கின்றான். அப்படிப்பட்டவர்கள் மதம், இறைவன் மீது கொள்ளும் பற்றும், நம்பிக்கையும் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் ஆழ்ந்த அர்த்தம் எமது இந்துக் கல்லூரியின் சகோதரர்கள் மற்றைய மதத்தினரையும் மதித்து அவர்களின் உணர்ச்சிகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதாகும். உருவாக்கம் தேவைகளின் அடிப்படையில் சூழ்நிலைகளுக்கேற்க அமைந்திருந்தாலும் இன்றைய வாழ்நிலை அதை மாற்றியமைக்கின்றது.

பரந்த மனம்படைத்த யாழ் பழைய மாணவர் இன்று எதிர்பார்ப்பது.

1) எந்த மதத்தவராக இருந்தாலும் அவர்கள் இந்துக்கல்லூரியில் கல்வி கற்பாராயின் அவரது உணர்வுகள் கட்டாயம் பாதுகாப்படவேண்டும்.

2) யாம் எவ்வளவு நம்பிக்கையை எமது மதத்தில் கொண்டுள்ளோமோ அதேயளவு நம்பிக்கை அவர்கள் மாதத்திலும் உண்டு என்பதை மதிக்கவேண்டும்.

3) எமக்கு சைசமயம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படும் அதேவேளை அவர்களுக்கும் அவர்கள் சமயம் போதிக்கப்படவேண்டும். அல்லது போதிப்பதற்கான வசதியை செய்ய வேண்டும்.

4) நாம் யாவரும் தமிழ்பேசும் மக்கள். மதத்தால் இந்துக் கல்லூரியில் யாரும் பாதிப்படையக் கூடாது.

இவைகளுக்கான உறுதிப்பாட்டை யாழ்பாபணம் இந்துக்கல்லூரி எதிர்காலத்தில் கல்விகற்கும் மற்றைய மத மாணவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாறிக் கொண்டிருக்கும் உலகத்தின் ஓட்டத்திற்கேற்ப யாமும் நம் நடைமுறைகளை மாற்றாமல் விட்டால் சென்றகாலம் காட்டிச் சென்ற துர்நாற்றப் பாதைகள்தான் எம் நிறைவுக்கு வரும். பசுமையும் செழுமையும் நிறைந்த பாடசாலை அனுபவங்கள் சிலர் புத்தகங்களில் கசப்பான கறுப்புக் கோடுகளாய் இருக்கும். தொடங்கப்பட்டது வரலாற்றுக் கட்டாயமான ஒன்றாக இருந்தாலும், நடந்து கொண்டிருப்பது எமது பரந்த உலகத்தின் விடிவுக்காய் இருக்கவேண்டும். அப்போதுதான் "நாடு உன்னுடையது, உலகம் எங்களுடையது" என்பது உண்மையாகும்.

க. பிரேம்சங்கர்.

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.



திரு. பரமலிங்கம் விவேகானந்தா (MBA Finance)
உபதலைவர்

யாழ் இந்து என்னும் கல்வித் தொழிற்சாலையில் 1983 இனக் கலவர ஆண்டில் சேர்ந்தேன்,1989துரீ மற்றும் இந்திய படைக் கலகத்துடன் வெளியேறினேன். கலகத்துடன் தொடங்கிய காலத்திற்கும் காலகத்தில் முடிந்த காலம் வரை நடந்த சம்பவங்கள் இன்றும் நீங்கா அலையுடன் நெஞ்சில் அலைபாய்கிறது. இந்த நினைவு இங்கு இருக்கும் எல்லோருக்கும், ஏன் இதை வாசிப்பவர்களுக்கும் இரை மீட்டும் என்பது எனது எண்ணம்.

எனது முதல் நாள் பள்ளிப் பிரவேசத்தை எண்ணிப் பார்க்கிறேன். ஒரு கிழமைக்கு முன்னரே புது அப்பியாசப் கொப்பிகளை வாங்கி சீமேந்து பேப்பரால் உறைபோட்டு, பின் அதற்கு வெள்ளை நிறத்தில் பேப்பர் அரைவாசிக்கு ஒட்டி, பெயர் வகுப்பு, பாடல் முதலியவற்றை எழுதி அதற்கு மேல் பொலத்தீன் உறை போட்டு மேசையில் அடுக்கி வைத்தால் ஒரு கட்டு வரும் 5முப தேறும், அன்று எம்மபவரிடையே பிரபலமாக இருந்தது "Renold Pen Blue,Black and Red. வேண்டி Cambridge Compars இல் வைத்து அழகு பார்ப்பது தான் எனது வேலை, பாடசாலை பையாக சிவப்பு, நீலம் என்று Singapoor Nilon Bag தாள் எல்லோரும் கொண்டு வருவார்கள் நான் மட்டும் Milkwhite soap paperl சேர்த்து (25) கொடுத்தால் காந்தி தாத்தா படம் போட்ட Bag ஐ ஆடைம வைற் அமரர் கனகராசா அவர்கள் தருவார் இது ஒரு Shoulder bag இதனுள் தான் எனது வாழ்க்கை பத்தாம் வகுப்பு வரை.

அந்த நாளும் வந்தது அதிகாலையில் எழுந்து பாடசாலைக்கு புது உடை தரித்து வீட்டில் காலை ஏழு மணிக்கே தயாராகிவிட்டேன். அதன் பின் ஒவ்வொரு மணித்துளியும் ஒரு யுகம் போல் கழியும், காரணம் புது வகுப்பு, புது நண்பர்கள், புதிய ஆசிரியர் என்று பல கனவுகளுடன் புத்தக பொதி தோளில் சுமக்க, ஏலாக் கொடுமையிலும் புன்சிரிப்புடன் அந்த பாரத்தை தாங்கிக் கொண்டு எனது தந்தையுடன் பாடசாலைக்கு சென்றேன். அங்கு என்னைப்போல் பலர் வந்திருந்தார்கள். எனது பழைய சிநேகிதர்களைக் கண்டவுடன் ஒரு உற்சாகம் என்று தடல்புடலான பரப்பான சூழ்நிலையில் பாடசாலை Cumarasamy Halll சென்றடைந்தோம். அனைவரும் அங்கு இருக்க, பாடசாலை மாணவ முதல்வர்கள் வந்து பெயர்களை உரக்க கூற அந்த வரிசையில் நாம் அணி வகுக்க எம்மை அழைத்துக் கொண்டு புது வகுப்பறைகளில் அதாவது Cumarasamy Hall கீழ் வகுப்புகளில் கொண்டு போய் சேர்த்தார்கள். அங்கு சென்றவுடன் நாம் எமக்கு பிடித்த இடங்களில் அமர்ந்து கொண்டோம். இங்கு எல்லோரும் அமைதியாக இருக்க வேண்டும். சில நிமிடங்களில் உங்களுடைய வகுப்பாசிரியர் வருவார் என்று சொல்லி அவர் சென்றார்.

சிறிது நேரத்தில் ஒரு கட்டையான உருவம், மேவி சீராக இழுத்த, கறுத்த உருவம் வெள்ளைச் சேட்டுடன் வந்து நின்றார். எனது பெயர் சீவரத்தினம், நான் தான் Class Master என்று கூறினார் சுமார் 45 வது மதிக்கலாம். பின் அவர் தான் GCEOL வரை Class Master. திருகோணமலையைச் சேர்ந்தவன், Hostel Master ஆகவும் பணியாற்றினார்.

வகுப்பு நடைமுறைகளை அடுக்கிச் சென்றார், எல்லோரும் 5ரூபாய் கொண்டு வர வேண்டும். வகுப்பை அலங்கரிக்க வேண்டும். ஆசிரியரின் மேசைக்கு மேசை விரிப்பு பல னுரளவநச என்று பல கட்டளைகள் பிறந்தது, பிறகு தான் தெரிந்து கொண்டோம். வகுப்பறையில் கதைப்பவர்களுக்கு அழிக்கும் னுரளவநச ஆலே முகத்துக்கு எறிவார் முகத்தில் னுரளவநசபட்டு, பவுடர் போட்ட போல் இருக்கும் இவர் எங்களுடைய விஞ்ஞான ஆசிரியர். எத்தனை பேருக்கு 108 மூலங்களின் பெயர் தெரியும், பெரும்பாலும் இவரிடம் படித்தவர்கள் அத்தனை பேரும் ஞாபகம் வைத்திருப்பார்கள். ஏன் என்றால் கேட்டு தெரியாவிட்டால் கையின் மொழியில் மர அலகு கோலால் அடிப்பார். அந்த வலி வருடத்திற்கும், ஏன் இப்ப நினைக்கவும் கை நடுங்குகிறது. எங்களில் அக்கறை கொண்டவர், தனது வகுப்பு எல்லாவற்றிலும் முதலாக வர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

எங்களுடைய கணித ஆசான், மானிப்பாயைச் சேர்ந்த நடராஜா மாஸ்ரர், படிப்பிக்க வேண்டும் என்று பாடசாலையில் க்'டப்பட்டு படிப்பிப்பார், கண்டிப்பு மிக்கவர் ர்ழஅந றழசம தந்து எல்லாவற்றையும் தானே திருத்துவார் பல்லு தெரிந்தாலும் கதைத்ததென கருதி

அடிப்பார்" பூவரசம் தடியால், அவர் நான் அறிந்த ஆறு வருடங்களில் ஒரே ஒரு நாள் தாயாரின் மரணத்திற்காக வரவில்லை, அவ்வளவு கடமை மிக்கவர், மாணவர்களால் மதிக்கவும் படுபவர்.

ஆம் மறந்துவிட்டேன், பாடசாலையின் அன்றைய Main Hero, P.S. Kumarasa அல உயரமான தோற்றமும் ஒவிய கூந்தலும், கொவ்வைப் படி கண்களும் கூரிய பார்வையும், நேரிய நெற்றியும் கொண்ட கண்டிப்பு மிக்க அதிபர், S. பொன்னம்பலம் (பொன்னர்) நெடிய சிவலை நிறமுடைய, நேர்த்தியாக உடையணிந்து பிரம்பை விசுக்கி செல்லும் உப அதிபர், அடித்ததை நான் பார்த்ததில்லை இவர்களுடன், பண்டிதர் சிவராமலிங்கபிள்ளை, யோகர் சுவாமிகளின் தொண்டன், மென்மையான போக்கும், அமைதியும், சாந்தமும் கொண்ட வெள்ளை வேட்டி, National அணிந்த முத்துகுமாரசாமி மாஸ்ரர் மகேந்திரன் மாஸ்ரர், காப்டன் சோமசுந்தரம், Scout நல்லையா மாஸ்ரர், தேவாரம் பாடமாக்காவிட்டால், எல்லோரையும் அதிபருக்கு ஒரு கடிதம் எழுது, அதாவது இந்த நாய் குமாரசிங்கம் தேவாரம் பாடமாக்கச் சொல்லி கரைச்சல் தருகுது தயவு செய்து என்னிடம் தேவாரம் கேட்க வேண்டாம் என்று சொல்லச் சொல்லி கடிதம் எழுதச் சொல்வார். எழுதி முடித்தவுடன் எல்லோரையும் கொண்டுவரச் சொல்லி மேசைக்கு கீழே குனியச் சொல்லி நல்ல பூசை பிரம்பால் தருவார். இவரும் சக்தி வழிபாடும், யோகர் சுவாமிகள் வழி சென்று இறுதியில் துறவறம் பூண்டு நல்லூர் தேரடியில் இருந்து இவரை தரிசிக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இரண்டு வருடங்களுக்கு முன் இறைபதம் அடைந்துவிட்டார்.

ஆங்கிலம் எமக்கு மயில்வாகனம் மனோகரன் ஆசிரியர் படிப்பித்தார். குறிப்பாக நாலாம் பாடம் பின் இடைவேளை வகுப்பில் பாடம் முடிய 10 நிமிடங்களுக்கு முன் இருவரை Canteenelh விடமும் ஒரு Plan Tea, ஒரு போண்டா மற்றும் வாய்ப்பான் வேண்டி வரச் சொல்வார்.

இந்த சாட்டில் நாமும் எமது பங்கை முதலாவதாக பெற்றுக்கொள்ளலாம், வகுப்பில் யாரை கூப்புடுவார் என்றுதான் எண்ணம், Grammar நன்றாக படிப்பிப்பார். அன்றைய யாழ் இந்துவின் "சிவாஜி கணேசன்" அவர்தான்.

பாடசாலையில் பல்வேறு சங்கங்கள் உருவாக்கி மாணவர்களுக்கு தலைமைப் பயிற்சியையும், பலருடன் சேர்ந்து இயங்கும் முறையைக் கற்றுந்தந்தார்கள் அதில் ளுஉழரவ - நல்லையா,St. John's Ambulance - சண்முகராஜா,Chess - மகேசன், தமிழ், சமயம் சண்முகலிங்கம், புண்ணியலிங்கம் என்று ஒவ்வொரு நாளும் ஒரு வகுப்பு நடைபெறும், இதில் மகேசன் மாஸ்ரர் ஒவ்வொரு வியாழன் அன்றும் ஒரு தலைப்பில் ஒருவர் 5 நிமிடங்கள் ஆங்கில சொற்பொழிவாற்ற வேண்டும். இதற்காக நாம் ஒவ்வொரு Sunday Times இல் Kids Zonetரும் கட்டுரைகளை படித்து மனப்பாடம் பண்ணி ஒப்பிவித்தால் உபாலி Candors Chocholate கிடைக்கும் என்று ஆங்கிலத்தை விரும்பும் படியாக செய்து எங்களை உற்சாக படுத்தியவர்.

சமய, தமிழ் கழகம் பாடசாலையில் நவராத்திரி போன்ற விழாக்காலங்களில் கட்டுரை, பேச்சுப் போட்டி, பட்டிமன்றம் என்று பல விழாக்களை நடாத்தி பரிசுகள் வழங்குவார்கள் அன்று ஆறாம் வகுப்பில் இருந்து, உயர்தரம் வரை சமய, தமிழ் ஈடுபாட்டில் எனக்கிருந்த அக்கறையை ஊக்குவித்தார்கள் பாடசாலை மட்டம், யாழ் மாவட்ட வட்டம் என்ற இரு நிலையிலும் போட்டிகள் நடைபெறும் இந்த போட்டிகளில் யாழ் இந்துவை பிரதிநிதிப்படுத்துவது அடியேன் தான், சகல போட்டிகளிலும் முதலாவது பரிசையே தட்டு விருவேன், சமய பாடத்தில் 98ஆயசமள க்கு குறைவாக ஒரு நாளும் எடுத்ததில்லை என்னுடன் படித்தவர்கள் சாட்சி பகருவார்கள்.

பாடசாலை அன்றைய காலகட்டத்தில் Cricket, Football என்று விளையாட்டு துறையில் கொடிகட்டிப் பறந்தது.

எமது காலப்பகுதியில் தான் வைரவப் பெருமானுக்கு ஆலயம் அமைக்க அடிகோலி நாம் எல்லோரும் வீடு வீடாகச் சென்று சிறுவேலைகள் செய்து சிறுகச் சேர்த்த நிதியில் சிறிய கோயிலாக P.S. காலத்தில் கட்ட தொடங்கப்பட்ட ஆலயம். S.Pகாலத்தில் பூத்தியாகி 1989 ஆண்டு கும்பாவிழா பெரும் சாத்தி விழாவும் காணப் பெற்றது.

1986 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பேராசான் "ளு அவர்கள் இளைப்பாறிச் சென்றார்கள், சுவாமி விவேகானந்தர் யாழ் இந்துவிற்கு வரும் பொழுது எவ்வாறு வரவேற்றார்களோ அவ்வாறு திறந்த பச்சை நிற ஜீப்பில் நாலு புறமும் கல்லூரி கொடி கட்டி மதியம் 12 மணியளவில் இதோ வருகிறது மாணவர் படை என்று பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை சாரணர்கள், மாணவ முதல்வர்கள் என்று மாணவர் படை சூடி, வீதியெங்கும் பூரண கும்பம் மாலை மேள தாழ ஒலியுடன் எங்களின் கண்ணீர் வெள்ளத்தில் அழைத்துச் சென்று மருத்தனாமடம் தாண்டி அவருடைய வீட்டில் சென்று சேர்த்தோம். அனைவருக்கும் பிஸ்கற், மற்றும் பழச்சாறு போன்றவை தந்து சிறு பிள்ளைகள் போன்ற பம்பரமாக சுழன்று எமக்கு எல்லாம் தந்து உபசரித்து விட்டார். அந்த கண்ணியமான அதிபரை அதே மாணவர் குழாம் ஆறு மாதத்திற்குள் இறுதியாத்திரையாக இடுகாட்டிற்கு எடுத்துச் சென்றோம், ஆசிரிய சேவையில் உச்சமாக இன்றும், என்றும் நிலைத்து நிற்பார் என்பது திண்ணம் அவருக்கு பிரித்தானிய பழைய மாணவர்கள் பூங்கா அமைத்து கௌரவப்படுத்தியுள்ளர்கள். "ளுஒரு சகாப்தம்.

அதிபர் பொன்னம்பலம் அவர்களுடைய காலம் போர் மேகமும் இளைஞர்களின் சுதந்திர போராட்டமும் தலைதூக்கி இருந்த காலம் பாடசாலையை இயக்குவது என்பது பல போராட்டம், எந்த நிமிடம் ளுநடட வரும் என்று தெரியாது, எந்த நிமிடம் டீழஅடிநசவரும் என்றும் தெரியாது, ஒவ்வொரு நாளும் ஒரு போராட்டம், ஒரு ஊர்வலம் என்று போராட்டம் தான். இந்த காலப்பகுதியில் தான் யாழ்பாணத்தில் 23 போராட்ட இயக்கங்கள் இருந்தன.

ஒவ்வொருவரும் ஒரு நாள் பிறர்தான் அறிவிப்பார்கள் எமது நேரம் ஊர்வலத்திலும், போராட்டத்திலும் தான் சென்றது யாழ் இந்துக் கல்லூரிக்கும் தமிழர் போராட்ட வரலாறுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு அதனை நீட்டினும் கட்டுரை திசைமாறிச் செல்லும்.

1988,89 காலப் பகுதியில் நானும் மாணவ தலைவனாக செயல்பட்டேன். 1988 ஆண்டு பகுதியில் பாடசாலையில் ஒரு யாகம் நடாத்தத் திட்டமிட்டிருந்தோம். அதற்கு சோமசுந்தர செட்டியாரும், நானும் பொறுப்பாக இருந்தோம். ஒரு நாள் மாலை 2.30 மணியளவில் அதிபர் தலைமையில் கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. நான் அதிபர் பணிபனை சென்றடையவும் இருவர் ஆயுதத்துடன் காலில் காயத்துடன் ஓடி வந்தார்கள். வரும் பொழுதே சேர் உள்ளே போங்கோ என்று சொல்லிக் கொண்டே நடாவின் ஊயவெநநெ பக்கமாக ஓடினார்கள் சிறிது நேரத்தில் பாட டீநடட அடிக்கவும் ஆசிரியர்களும் அணிவகுத்துச் சென்றார்கள். சிறிது நேரத்தில் இந்தியப் படையும், சில ஆயுத குழுக்களும் வந்தடைந்தார்கள்.

எங்கே அவர்கள் என்று தமிழில் கத்திய வண்ணம் வந்தார்கள் சிறிது நேரத்தில் துப்பாக்கியால் சுடத் தொடங்கினார்கள். இதன் போது வகுப்பறைகளுக்கு சென்று கொண்டிருந்த திரு. சண்முகலிங்கன் அவர்கள் சுடப்படுகிறார். திரு. பாபு மாஸ்ரர், தவமணிதாசன் மாஸ்ரர் ஆகியோர் சுடப்படுகிறார்கள். சிறிது நேரத்தில் முதுகில் இரத்தத்துடன் கத்தியபடி தவமணிதாசன் அவர்கள் அதிபர் பணிமனை அடைய நானும், செட்டியார் சோமசுந்தரம் அவர்களும், தவமணிதாசன் அவர்களை பிடித்துக் கொண்டு Main Road க்கு ஓடினோம். அப்பொழுது பாபு மாஸ்ரர் வயிற்றில் குண்டு அடிபட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். சண்முக லிங்கன் அவர்கள் அவ்விடத்திலே உயிர் துறந்திருந்தார். பாபு மாஸ்ரரை தூக்கி ஒரு யு40காரில் ஏத்திக் கொண்டும், சண்முக லிங்கன் மாஸ்ரரின் உடலை Boot இல் போட்டுக் கொண்டு யாழ் போதனாசாலையை சென்றோம். அப்பொழுது சில இராணுவத்தினர் இளைப்பாறிய ஆசான் மகேசன் மாஸ்ரரை தடியால் அடித்துக் கொண்டு இருந்தார்கள். நானும் செட்டியார் அவர்களும் இரத்தால் சிவந்து, பாபுமாஸ்ரரை அவசர பிரிவில் சேர்த்து, Surgen பொன்னம்பலத்தின் சத்திர சிக்ச்சையில் தப்பி பூரண குணமடைந்து தற்பொழுது Australia இருப்பதாக அறிகிறேன். இதனைத் தொடர்ந்து 3 நாட்கள் தொடர் பகிஸ்கரிப்பு, துக்கதினம் என்று பாடசாலை சோகை இழந்து காணப்பட்டது. மூன்றாம் நாள் எமது பாடசாலைக்கு Major திபேந்திரசிங் வருகை தந்தார். மாணவ தலைவர்களுக்கும் அதிபர், உப அதிபர் மகேந்திரன் மாஸ்ரர் ஆகியோருடன் கூட்டம் நடைபெற்றது. அதில் அவர்கள் தமது நியாயத்தை கூறினார்கள்.

நாமும் எமது நியாயத்தை கூறினோம் இளம் இரத்தம் அல்லவா வாக்குவாதம் சூடேறியது ஒரு கட்டத்தில் திபேந்திர சிங் கூறினார் உங்கள் 12 பேரை கைது செய்தால் புலியை ஒழித்ததிற்கு சமம் என்றார், நாம் அத்துடன் மௌனமாகிவிட்டோம். அன்றைய சூழலில், காண்டீபன், ரவிக்குமார், அகிலன், சிவக்குமார், து்யந்தன், சுரேஷ், கிருபா, ஜெயப்பிரகா', கிருஷ்ணகுமார், நான், சர்வேஸ்வரன் போன்றோர் இருந்தோம் பலர் பல்வேறு போராட்ட அமைப்பைச் சார்ந்திருந்தார்கள் இதனை அறிந்து வைத்துத்தான், அவர் இந்த கைது என்ற அறிவிப்பை கூறினார். நாங்களும் பயந்து புதிய வழிகளை தேடி மாணவர் அடையாள அட்டை ஒன்றை உருவாக்கி இதனை எந்த நேரம் எங்களுடன் கொண்டு செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள், இவ்வாறு போராட்டமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையே போராட்டமாகவும் இருந்தது. இந்த காலகட்டத்தில் 1989 ஆண்டு வடக்கில் இந்திய - புலிபோராட்டம், தெற்கில் இலங்கை JUP Nபாராட்டம் என்று போராட்ட மயம், எங்கும் யுத்தம், பொருளாதா பிரச்சனை, இடப்பெயர்வு,யுட்ட நுஒயஅ பிற்போடப்பட்டது. எப்பொழுது என்று தெரியாது அவ்வழவிற்கு யுத்தம் நாடே போரின் பிடியில் இருந்தது. மாணவர்களின் இடப் பெயர்வு, விடுதி மாணவர்கள் சொந்த இடம் திரும்பினார்கள், இவ்வாறு நிலையற்ற வாழ்க்கையில் இருந்தோம். பாடசாலைகள் காலவரையற்று மூடிக்கிடந்தது, எமது பாடசாலையும் அகதி முகாமாக மாறியதுர்ளவநட உடைந்து சேதமடைந்தது என்று எங்கும் கண்ணீர் ஓலம், சுடுகாடாக காட்சியளித்தது. திலீபனின் மரணம், ஜனாதிபதி பிரேமதாசா மரணம்,துருரோசண விஜய வீர மரணம் என்று பல மாற்றங்கள் நடைபெற்றன.

இவ்வாறான சூழலில் எமது மாணவ பருவம் பல காலம் இடப்பெயர்விலும் போராட்டத்திலும் கழித்துவிட்டோம் இன்று இழந்த்து பல நாம் மண்ணை இழந்தோம், உறவை இழந்தோம், தாய் மண்ணை பிரிந்தோம் அகதி என்ற போர்வையில் நாடுகள் பல கடந்தோம் எங்கு சென்றாலும் பாடசாலை என்ற தொழிற்சாலை தந்த பாடம் எம்மை புடம் போட்டு பல நிலைகளில் நாம் எல்லோரும் முன்னேறி உள்ளோம். அதன் வெளிப்பாடுதான், நாடுகள் தோறும் சங்கம் அமைத்து அதனூடாக ஒன்று கூடல்களை ஏற்படுத்தி சிறுகச் சேர்த்து பல திட்டங்கள் தீட்டி சமூகத்திற்கும், பாடசாலைக்கும் தொடர்ந்து எம்மால் ஆன சேவைகளை செய்து வருகிறோம். இந்த நினைவலைகளை எழுதும் போது பலரும் பல்வேறு அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள் அதனை பகிர்வதன் மூலம் ஒருநாள் எல்லாவற்றையும் தொகுக்கும் பொழுது அது ஆவணமாக மாறுகிறது. ஆகவே நண்பர்களே இனிவரும் காலங்களில் உங்களின் அனுபவ பகிர்வுகளை எண்ணங்களை திறந்து விடுங்கள் என்று வேண்டி அலைகள் பல எழுந்து வந்தாலும், அணையேட்டு எனது நினைவலை என்று பெட்டகத்தை தாழிட எண்ணி உங்களிடம் அலையை ஏற்படுத்தி விடை பெறுகின்றேன்.

நன்றி

பாடித்திரிந்த பசுமை நிறைந்த தோழர்களே, பறவைகளே,
பாடித்திரிந்த பறவைகளே பாடலின் நாலு வரிகள்
பறந்து செல்கிறோம் நாம் பறந்துசெல்கிறோம்

# VEL ESTATE LTD.

Do you want to Sell or Let your Property?

Do you want to buy or Rent a Property?

Talk to us with confident, We Sell, Let or Lease Commercial and residential properties.

for Land Lords we can provide rent guarantee insurance.


We have 13 years experience in estate agency for more details please contact us on or
velestates@gmail.com

## VEL ESTATE LTD.

12B Staly House, Stanly Avenue, Wembley, Middlesex HA0 4JB

## 020 8902 6383

வீடுகள், வீயாபார நிலையங்கள் விற்கவோ, வாங்வோ அல்லது
வாடகை பரிமாற்றங்களோ, எதுவாகினும்
முடிவை நீங்கள் எடுங்கள். மீதியை “வேல்” இடம் விட்டு
விடுங்கள், வெற்றியோடு திரும்புவீர்கள்.


ENGINE TEC MOTORS
We offer Facilities For:
* Servicing
* Clutches
* Brakes
* Overhauls
* Car Electricals
* Pre-MOT Checks
* All Types of Repair & Body Work
* Insurance Work Undertaken
என்ஜின் டெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்
Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945
Email: vel@etmluk.com
rajan@etmluk.com
www.etmluk.com
Unit 5,339 London Road
Mitcham, Surrey CR4 4BE


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Tamil Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5, Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIM SAREES
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)

# புற்றுநோய் ஓர் அறிமுகம்

## புற்றுநோய் என்றால் என்ன?

இது உடற் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் எனக் கொள்ளலாம். புற்றுநோய் எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.

உலகளாவியரீதியில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதேபோல் இலங்கையிலும் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. புற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பானது பெண்களில் கூடுதலாக உள்ளது

இலங்கையில் ஆண்களில் புற்றுநோயானது வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் அதிகூடிய அளவிலும், இரண்டாவதாக நுரையீரலில் அதிக அளவிலுமாக ஏற்படுகின்றது. பெண்களில் மார்பகங்களிலேயே அதிக அளவில் புற்றுநோய் ஏற்படுகிறது. இரண்டாவதாகக் கருப்பைக் கழுத்துப் பகுதியிலும், மூன்றாவதாக களப்பகுதியிலும் ஏற்படுகின்றது. இலங்கையில் ஒரு வருடத்தில் சுமார் 25,000 புதிய நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். இவர்களில் கணிசமானோர் பிந்திய நிலைகளிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.

உலகளாவிய கணிப்பீடுகளின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டளவில் 10.3 மில்லியன் மக்களும் 2030ஆம் ஆண்டளவில் 12 மில்லியன் மக்களும் புற்று நோயால் மரணிப்பர் என்று எதிர்வு கூறப்படுகின்றது.இவ்வாறு மரணிப்பவர்களில் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது.

புற்றுநோயானது எமது பரம்பரை அலகுகள், சூழலில் ஏற்படும் மாற்றங்கள், உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் எனப் பல காரணிகளின் ஒட்டு மொத்தத் தாக்கங்களின் விளைவாகவே எமது உடலில் ஏற்படுகிறது. இந்தத் தாக்கச் செயற்பாடுகள் என்ன என்பது தற்போது பெருமளவில் கல உள் அளவிலான ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிவின் வளர்ச்சி புற்றுநோய்க்கான நிர்ப்பீடான ஊசி (Vaccination) வழங்கல் மூலமாக புற்றுநோயை இல்லாதொழித்தல், புற்று நோயைக் குணமாக்கல் அல்லது அதன் அசௌகரியத்தைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வழிசமைத்துள்ளது.

### புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள் யாவை?

1. வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

உலகளாவிய ரீதியில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. வயோதிப காலத்தில், உடலின் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக இல்லாது செயற்படுவதனால் அசாதாரண வளர்ச்சிகள் இலகுவாக ஏற்படுகின்றன.

2. தனி நபர் சார்ந்த பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள்.

- புகையிலை பாவித்தல் : இதனைப் புகைப்பதனாலோ, அருகிலிருந்து உள்வாங்குவதினாலோ, அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்வதனாலோ புற்றுநோய், குறிப்பாக நுரையீரல், வாய், தொண்டை மற்றும் களப்பகுதியில் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

- மதுபானம் அருந்துதல் : இதன் இரசாயன மற்றும் எரிவுத் தாக்கத்தால் வாய், தொண்டை, களப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்புற்று ஈற்றில் ஈரலில் புற்றுநோய் ஏற்படும்.

- பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றவற்றை வெற்றிலையுடன் உட்கொள்ளல். இவை வாய், தொண்டை, களப்புற்று நோய்களை அதிக அளவில் ஏற்படுத்தும்.

- வாய்ச் சுகாதாரமின்மை மற்றும் ஒழுங்கற்ற பற்களால் அல்லது சரியான அளவிற் செய்யப்படாத செயற்கைப் பற்களால் ஏற்படும் தொடர் உறுத்தல் என்பனவும் வாய்ப்புற்றுநோயை ஏற்படுத்தும்.

- மாறுபட்ட உணவுப் பழக்க வழக்கங்கள் : அதிக கொழுப்பு அடங்கிய உணவு, பொரித்த, கருக்கிய உணவுகள், நிற மூட்டிய உணவுகள் மற்றும் உறைப்பான உணவுகள் என்பன பலவகையான புற்றுநோய்களை குறிப்பாக, மார்பகப் புற்றுநோய், குடற் புற்றுநோய் மற்றும் களப் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன.

• போதைப்பொருற் பாவனை மற்றும் கட்டுப்பாடற்ற / பாதுகாப்பற்ற பாலியல் பழக்கழக்கங்கள் இவை குறிப்பாக வைரசுக்களால் ஏற்படும் புற்றுநோய்களை அதிகரிக்கின்றன. உதாரணமாக பாலுண்ணி வைரஸ் (ர்ரஅயபெ் யிடைடழஅய ஏசைரள) பெண்களில் கருப்பைக் கழுத்தப் புற்றுநோயை அதிக அளவில் ஏற்படுகின்றது. ஈரல் அழற்சி வைரஸ் (ர்நியவவைளை ஏசைரள டீஇ ஊ)மூலமாக ஈரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. எயிட்ஸ் நோயுடன் தொடர்பாகவும் புற்று நோய்கள், குறிப்பாகக் கருப்பைக் கழுத்தப் புற்றுநோய், குதப்புற்றுநோய் மற்றும் நிணநீர்க்கணுப் புற்றுநோய் என்பன எற்படுகின்றன.

**3. சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்**

• நகரமயமாக்குதல் மற்றும் பலவேறு வகைகளில் சூழல் மாசடைதல்.

• தொழிற்சாலைகள் உருவாக்கப்படலும், அதன் விளைவாக இரசாயன, பௌதீகக் கழிவுகள் சூழலில் கட்டுப்பாடுகள் கடந்து கலத்தல்.

• கட்டுப்பாடற்ற முறையில் விவசாயத்துக்காகப் பீடை கொல்லிகள், வளமாக்கிகளைப் பயன்படுத்தல். இதன்மூலம் சுவாசிக்கும் காற்று, குடிப்பதற்காகப் பயன்படுத்தும் நிலத்தடி நீர் மற்றும் உண்ணும் மரக்கறி வகைகள் என்பவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் செறிந்து இருப்பதன் மூலம் எமது உடற் கலங்களைப் பாதிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீடத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் யாழ்ப்பாணப் பிரதேச நிலத்தடி நீரானது அதிகளவிலான நைத்திரேற்றுகள் கொண்டதாக உள்ளமை நிருபிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் விவசாயிகள் பீடை நாசினிகளை, கடைசியாக விசிறியதில் இரந்து ஒரு சில நாட்களிலேயே விற்பனைக்காக அறுவடை செய்கின்றனர் என்பது கண்கூடு. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாம் எமக்குத் தெரியாமலேயே உடலுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் இரசாயனங்களை உள்ளெடுத்து ஈற்றில் புற்றுநோயாளியாகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

**4. பெண்களில் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் அதிக அளவில் ஏற்படுகின்றது.**

**5. சூரியனில் இருந்துவரும் அல்ரா வயலற் (ருஏ) கதிர்கள் மூலமாகவும் ஓசோன் படல உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள் மூலமாகவும் தோல் சம்பந்தமான புற்றுநோய்கள் எற்படுகின்றன.**

**6. அணுக்கதிர்த் தாக்கம்**

அணுக்கதிர்த்தாக்கம் புற்றுநோயை ஏற்படுத்தம் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக 1945களில் இடம்பெற்ற ஜப்பானிய அணுக்குண்டுத் தாக்குதலின் பின் அப்பிரதேசத்தில் உயிர் பிழைத்து வாழ்ந்த பலர், ஆண்டுகள் சிலகழிந்து புற்றுநோய்த்தாக்கத்துக்கு உள்ளாகினர். இதேபோன்று 1986இல் சேணோபில் (ஊாநசழெடிைட) இல் நடைபெற்ற அணு உலை விபத்தின் பின்னர் பல சிறுவர்கள் தைரொயிட் புற்றுநோய்க்கு ஆளாகியுள்ளனர். அண்மையில் நடைபெற்ற சுனாமித் தாக்கம் காரணமாக ஜப்பானில் ஏற்பட்ட அணுக்கசிவானதது அங்கு வாழம் மக்களின் எதிர் காலத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். பல வளர்ச்சியடைந்த நாடுகள் அணுசக்தியை யுத்தத்தக்காகவும் பயன்படுத்தத் தயாராகிப் பெரிய அணு ஆயுத உற்பத்தியிலும் இறங்கியுள்ளன. இந்தச் செயற்பாடானது மனித குலத்துக்கே பெரிய அழிவை ஏற்படுத்துவதுடன் தப்பிப்பழைப்போரும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு நாளடைவில் முகம் கொடுக்கவும் நேரிடும் என்பது நிச்சயம்.

**7. பரம்பரை அலகுகளின் தன்மை**

ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப்புற்று நோய், குடற்புற்றுநோய் மற்றும் சிலவகையான இரத்தப் புற்றுநோய் என்பன ஒரு சிலரில் பரம்பரை அலகுகளின் இயல்பான பாதிப்புற்ற தன்மை காரணமாக இலகுவில் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது.

**8. உடற்பயிற்சி இன்மை**

இதன் விளைவாக எமது உடம்பு பருக்கும்போது குடல் மற்றும் மார்பகப் புற்றுநோய்கள் அதிகளவில் ஏற்படுவதுடன் இதய சம்பந்தமான நோய்களும் அதிகளவில் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நாம் தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்து உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது நல்லது.



இந்த ஆக்கமானது யாழ் இந்துகல்லூரியின் பழைய மாணவனும் வடமாகாணத்தின் முதலாவது புற்றுநோய் சிகிச்சை நிபுணராக பணியாற்றி, தற்போது இலங்கை தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் பணியாற்றும் வைத்திய கலாநிதி நடராஜா ஜெயகுமாரன் ஆல் எமது கலைஅரசி நூலில் வெளியிடுவதற்கு வழங்கப்பட்டது.

# புற்றுநோய் உருவாக்கம்

புற்றுநோயை உருவாக்கும் காரணிகள் எமது சாதாரண உடற் கலங்களை உடனடியாகப் புற்றுநோய்க் கலங்களாக மாற்றமடையச் செய்வதில்லை. புற்றுநோயானது பல படிமுறை மாற்றங்கள் ஊடாக (Multi Step Processes) ஏற்படுகின்றது. எமது உடற் கலங்கள் புற்றுநோயாக மாற்றமடைவது நாம் அரவணைக்கும் பாதகமான காரணிகள் மற்றும் பாதுகாப்பான காரணிகளின் அளவுத் தன்மையிலேயே தங்கியுள்ளது.

எமது சாதாரண உடற்கலங்களில் குறிப்பாக உடல் மேலணிக் கலங்களில் இரசாயனங்கள், அணுக்கதிர் வீச்சு மற்றும் வைரஸ் தொற்று என்பவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகையில் பல படிகளுடாக புற்றுநோய் ஏற்பட்டு ஈற்றில் முற்றிய நிலையை அடைகின்றது.

இவ்வாறான மாற்றங்களின் போது எமது உடற்கலங்களில் உள்ள நிற மூர்த்தங்கள் (DNA) முதலில் உடைவுகள் மற்றும் மாற்றங்களுக்குள்ளாகின்றன. சிறிய மாற்றங்கள் ஏற்படும் இடத்து எமது உடலில் உள்ள நொதியங்கள் மற்றும் பாதுகாக்கும் காரணிகளினால் மீளவும் சரி செய்யப்படுகின்றன. அவற்றையும் மீறி மாற்றமடையும் கலங்கள் எமது உடல் நிர்ப்பீடான சக்தியால் அழிவடையச் செய்யப்படுகின்றன. எனவே, கூட்டு மொத்த விளைவு காரணமாகக் குறிப்பாக எமது உடலில் உள்ள பாதுகாக்கும் காரணிகள், நொதியங்கள் மற்றும் நிர்ப்பீடான சக்தி குறைவாக இருக்கையில் புற்றுநோய் உருவாக்கம் ஏற்படுவது நிச்சயமாகின்றது.

புற்றுநோய் உருவாக்கத்தினை கல உள் அளவில் நோக்குவோமாயின், முதலில் சாதாரண உடற்கலங்கள் புற்றுநோயின் ஆரம்பக் கல நிலைக்கு (Initiated Cells) மாற்ற மடைந்து, பின்னர் புற்றுநோய் முன்னிலைக் கலங்களாகி, பின்னர் அப்பகுதியில் அருகே உள்ள இழையங்களை ஊடுருவி, அழுத்தம் கொடுத்து மேலும் அவற்றுடன் உணவு, ஒட்சிசன் போன்றவற்றுக்குப் போட்டியிட்டு ஓர் ஒட்டுண்ணி போலச் செயற்படும். இவ்வாறு உருவாகும் புற்றுநோய்க் கட்டிகள் ஈற்றில் வேறு உறுப்புகளுக்கு (நுரையீரல்,ஈரல், மூளை, என்பு) பரவலடைந்து முற்றிய நிலையை அடைகின்றது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அல்லது முழுமையாகவே மாற்றமடைந்த அங்கம் அல்லது உறுப்பு அதன் சாதாரண செயலைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படும்.

இது மட்டுமல்லாது புற்றுநோய்க் கலங்கள் வேறு அங்கங்களுக்குச் செல்லுமிடத்து அந்த அங்கங்களிலும் பெருக்கமடைந்து அவற்றின் செயற்பாட்டையும் பாதிப்புறச் செய்யும்.

### புற்றுநோயின் அறிகுறிகள்

1. நீண்டகாலமாக நிலைத்திருக்கும் இருமல் அல்லது குரல் வித்தியாசம்

